**கவனிக்க**.- 19.09.2025 ஆந் திகதிய 2455 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2456 - 2025 සැප්තැම්බර් මස 26 වැනි සිකුරාදා - 2025.09.26

2456 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1210 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1215 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2025, ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள**,
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/ கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடுத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கை பொலிஸ் மருத்துவ சேவைகள் பிரிவில் மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு நிலவும் வெற்றிடங்களுக்கு அரச மற்றும் தனியார் துறையில் பணியாற்றும் மருத்துவ உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்

பொலிஸ் மருத்துவ சேவைகள் பிரிவில் மருத்துவ உத்தியோகத்தர் பதவிகளுக்கு நிலவும் பின்வரும் வெற்றிடங்களுக்கு, அரச மற்றும் தனியார் துறையில் தற்போது பணியாற்றும் மருத்துவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- சத்திர சிகிச்சை மருத்துவ நிபுணர் பதவி - 01
- சர்வாங்க மருத்துவ நிபுணர் பதவி - 01
- கதிர்வீச்சு மருத்துவ நிபுணர் பதவி - 01
- மருத்துவ ஊட்டச்சத்து மருத்துவ நிபுணர் பதவி - 01
- மயக்க மருந்து மருத்துவ நிபுணர் பதவி - 01
- பொது மருத்துவர் பதவி - 16
- பல் சத்திரசிகிச்சை மருத்துவர் பதவி - 04

2. தகுதியுடைய மருத்துவர்கள், கீழ்க் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை பூர்த்திசெய்து, தேவையான சான்றிதழ்களின் நிழற் பிரதிகளுடன் 2025.10.27 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பணிப்பாளர், ஆட்சேர்ப்பு, இல. 375, ஸ்ரீசம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு - 06 எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவம் இடப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியினைக் குறிப்பிடுதல் வேண்டும். குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். எக்காரணம்கொண்டும் விண்ணப்பங்களை தனிப்பட்ட முறையில் கையளித்தல் கூடாது.

3. **தகைமைகள் மற்றும் அனுபவம்** - நிபுணத்துவ மருத்துவர் (உபசேவை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்)

3.1. குறித்த துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப் பின் மருத்துவப் பட்டம் பெற்றிருத்தல்.

3.2. இலங்கை மருத்துவ சபையினால் நிபுணத்துவ மருத்துவராகப் இற்றைப்படுத்தப்பட்ட முழுமையான பதிவினைப் பெற்றிருத்தல்.

3.3. குறித்த துறையில் குறைந்தபட்சம் ஒருவருட நியமனத்திற்குப் பிந்திய அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

4. தகைமைகள் மற்றும் அனுபவம் - பொது மருத்துவர் (உபசேவை உதவி பொலிஸ் அத்தியட்சகர்)

4.1. M.B.B.S. அல்லது அதற்கு சமமான வெளிநாட்டு மருத்துவப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

4.2. இலங்கை மருத்துவ சபையினால் இற்றைப்படுத்தப்பட்ட முழுமையான பதிவினை பெற்றிருத்தல்.

4.3. அரச அல்லது தனியார் துறையைச் சேர்ந்த எந்தவொரு மருத்துவருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

5. **தகைமைகள் மற்றும் அனுபவம்** - பல் சத்திரசிகிச்சை நிபுணர் (உபசேவை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்)

5.1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பல் மருத்துவப் பட்டமொன்றை அல்லது அதற்கு சமமான பல் மருத்துவப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

5.2. இலங்கை மருத்துவ சபையினால் இற்றைப் படுத்தப்பட்ட முழுமையான பதிவினைப் பெற்றிருத்தல்.

5.3. அரசாங்க அல்லது தனியார் துறையைச் சேர்ந்த எந்தவொரு மருத்துவருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

6. **சம்பளம், ஏனைய கொடுப்பனவுகள் மற்றும் வசதிகள்**

| *இப்பதவிக்கு விண்ணப்பிக்கும் அரசாங்க சேவையிலுள்ள மருத்துவர்களுக்கான கொடுப்பனவுகள் மற்றும் வசதிகள்* | *இப்பதவிக்கு விண்ணப்பிக்கும் தனியார் சேவையிலுள்ள மருத்துவர்களுக்கான சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வசதிகள்* |
|---|---|
| உபசேவை உ.பொ.அ./ பொ.அ./ சி.பொ.அ. (மருத்துவர்) உத்தியோகத்தர் பதவிக்கு, சுகாதார அமைச்சின் கீழ் பணியாற்றும் மருத்துவ உத்தியோகத்தர்களை தற்காலிகமாக விடுவிக்கும் போது செலுத்தப்படும் சம்பளம். | உபசேவை உ.பொ.அ./ பொ.அ./சி.பொ.அ. (மருத்துவர்) உத்தியோகத்தர் பதவிக்கு 2015.04.23 ஆம் திகதிய அமப/15/0240/606/2013 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், நேரடியாக மருத்துவர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படும்போது செலுத்தப்படும் சம்பளம் (அனைத்து சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் இலங்கை பொலிஸ் மூலம் செலுத்தப்படும்). |

| *இப்பதவிக்கு விண்ணப்பிக்கும் அரசாங்க சேவையிலுள்ள மருத்துவர்களுக்கான கொடுப்பனவுகள் மற்றும் வசதிகள்* | *இப்பதவிக்கு விண்ணப்பிக்கும் தனியார் சேவையிலுள்ள மருத்துவர்களுக்கான சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வசதிகள்* |
|---|---|
| குறித்த மருத்துவர் சுகாதார அமைச்சில் வகிக்கும் நிரந்தரப் பதவிக்குரியதாக சுகாதார அமைச்சினால் செலுத்தப்படுகின்ற சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள், இலங்கை பொலிஸ் மூலம் மீளளிப்புச் செய்யப்படும். | அடிப்படை சம்பளம்<br>உபசேவை உ.பொ.அ (மருத்துவர்) - ரூ. 82,150<br>உபசேவை பொ.அ. (மருத்துவர்) - ரூ. 98,950<br>உபசேவை சி.பொ.அ. (மருத்துவர்) - ரூ. 112,030 |
| மேலதிக சேவைக் கொடுப்பனவு (அதிகபட்சம் 120 மணித்தியாலங்களுக்கு), உண்மையாக வேலை செய்த மணித்தியாலங்களின் அடிப்படையில் இலங்கை பொலிஸ் மூலம் செலுத்தப்படும். | விசேட கொடுப்பனவு: 07/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின்படி சம்பளத்தில் 22% உடன் ரூ. 1250/- |
| போக்குவரத்து வசதிகள் | வாழ்வாதாரக் கொடுப்பனவு: ரூ. 17,800 |
| | கஷ்டப் பிரதேச சலுகைக் கொடுப்பனவு: ரூ. 2000 |
| | சீருடை சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு: ரூ. 250 |
| | உணவு மற்றும் தங்குமிடக் கொடுப்பனவு: ரூ. 34,800 |
| | போக்குவரத்து வசதிகள் |

6.1 அரசாங்க சேவையிலிருந்து ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்ற மருத்துவர்கள் பொலிஸ் உப சேவையில் இரண்டாம் நிலை அடிப்படையிலும், அதற்கு அப்பாற்பட்ட முறையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்ற மருத்துவர்கள் உபசேவை அடிப்படையிலும் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள்.

6.2 இரண்டாம் நிலை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்ற மருத்துவர்களுக்கு சுகாதார அமைச்சினால் செலுத்தப்படும் சம்பளவேற்றங்களையும், அனைத்து கொடுப்பனவுகளையும் பெறுவதற்கு தகுதியுடையவர்களாவர் என்பதுடன், இவ் ஆட்சேர்ப்பு சுகாதார சேவையின் சேவைமூப்புக்குப் பாதிப்பை ஏற்படுத்தாது.

6.3 உபசேவை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்ற மருத்துவர்களுக்கு அப்பதவிக்குரிய சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வசதிகள் வழங்கப்படும்.

6.4 போக்குவரத்து வசதிகள், அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் அந்தந்த பதவிகளுக்குரிய பிற வசதிகளும் வழங்கப்படும்.

7 **சேவை நிபந்தனைகள் :**

7.1 விண்ணப்பதாரிகள், பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் உட்பட தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், நிபந்தனைகள் மற்றும் சுற்றுநிருபங்கள், தாபன விதிக்கோவை ஏற்பாடுகள், நிதி ஒழுங்குவிதிகள், பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள், திறைசேரி சுற்றறிக்கைகள், இலங்கைப் பொலிஸ் கட்டளைகள், பொலிஸ் வர்த்தமானி அறிவித்தல்கள், பொலிஸ்மா அதிபரின் சுற்றறிக்கைகள், பிற ஆலோசனை நடவடிக்கைமுறை ஒழுங்குவிதிகள் மற்றும் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் என்பவற்றிற்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

7.2 இந்நியமனங்கள் தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 2022.12.14 ஆம் திகதிய 2310/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நடைமுறை விதிகளில் காட்டப்படுகின்ற நிபந்தனைகள் மற்றும் தாபன விதிக்கோவை ஏற்பாடுகள் பொருந்தும்.

7.3 தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் நியமனம் பெறுவதற்கு முன்னர் பின்புலம் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். மேலும் பொலிஸ் சேவைக்கு பொருத்தமற்ற விண்ணப்பதாரர்கள் நிராகரிக்கப்படுவார்கள்.

8. விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் நிழற்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்

- ➢ பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்
- ➢ தேசிய அடையாள அட்டை / செல்லுபடியான கடவுச்சீட்டு
- ➢ மருத்துவ சபையால் வழங்கப்பட்ட அடையாள அட்டை
- ➢ மருத்துவப் பட்டச் சான்றிதழ்
- ➢ இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்துகொண்ட செல்லுபடியான பதிவுச் சான்றிதழ்

- மருத்துவத் தொழில் நிபுணத்துவம் தொடர்பான விசேட தகைமைகள் மற்றும் அனுபவம் பற்றிய சான்றிதழ்கள்
- மேலதிக தகவல்களுக்கு, மின்னஞ்சல் :- dir.ro@police.gov.lk

பிரியந்த வீரசூரிய,
பொலிஸ்மா அதிபர்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை பொலிஸ் மருத்துவ சேவைகள் பிரிவில் மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு நிலவும் வெற்றிடங்களுக்கு அரச மற்றும் தனியார் துறையில் பணியாற்றும் மருத்துவ உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்**

1) விண்ணப்பிக்கும் பதவி :-......................................................................................................
2) விண்ணப்பதாரரின் முழுப் பெயர் :-.................................................................................
3) விண்ணப்பதாரரின் பெயர் முதலெழுத்துக்களுடன் :-............................................
4) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் :-..................................................
5) நிரந்தர முகவரி :-.........................................................................................................................
6) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் பிரிவு :-..................................................................
   (i) கடிதத் தொடர்புக்கான முகவரி :-........................................................................
   (ii) தொலைபேசி இலக்கம் :-...........................................................................................
   (iii) மின்னஞ்சல் முகவரி :-...............................................................................................
7) பிறந்த திகதி :-..............................................................................................................................
8) தேசிய அடையாள அட்டை இலக்கம் :-.......................................................................
9) சிவில் அந்தஸ்து:- ........................................................................................................................
10) தற்போது பணிபுரியும் மருத்துவமனை :-....................................................................
11) தற்போது வகிக்கும் பதவி :-...................................................................................................
12) தற்போதைய பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :-.....................................................
13) தொழில்சார் தகைமைகள் :-..................................................................................................
14) விசேட தகைமைகளும் அனுபவமும் :-.......................................................................

மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் விபரங்கள் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் நான் உறுதிப்படுத்துகின்றேன். என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் பிழையானவை அல்லது பொய்யானவை என தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் தெரியவந்தால், நான் தகுதியற்றவனாவேன் என்பதையும், சேவையில் இணைக்கப்பட்ட பின்னர் தெரியவந்தால், எந்தவொரு நட்டஈடுமின்றி இலங்கைப் பொலிஸ் சேவையிலிருந்து பணி நீக்கம் செய்யப்படுவேன் என்பதையும் நான் நன்கு அறிவேன்.

...............................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

திகதி :..................

09-222

**விவசாய, கால்நடைகள். காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கீழுள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் ஆரம்ப அரைத் தேர்ச்சியற்ற சேவைத் தொகுதியின் கீழ் பதவிகளுக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல் - 2025**

1. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் ஆரம்ப தேர்ச்சியற்ற சேவைத் தொகுதியின் கீழ் பதவிகளுக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்காக நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம் அவர்களால் 2025, நவெம்பர் மாதம் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1.1 **ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் பதவிகள்:**

| *தொடர் இலக்கம்* | *பதவிப் பெயர்* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* | *ஆட்சேர்க்கும் தரம்* |
|---|---|---|---|
| 01 | வெளிக்கள காவலாளி (Field Watcher) | 45 | III ஆம் தரம் |
| 02 | சுத்திகரித்தல் மற்றும் உதவியாளர்(Cleaner and Helper) | 05 | III ஆம் தரம் |
| 03 | ஆய்வுகூட பணியாளர் (Laboratory Attendant) | 37 | III ஆம் தரம் |
| 04 | ஆய்வுகூடதொழிலாளி Laboratory Labourer | 18 | III ஆம் தரம் |
| 05 | கிரீசர் (Greaser) | 35 | III ஆம் தரம் |
| 06 | திட்ட தட்டச்சு உதவியாளர் (Plan Printer Helper) | 08 | III ஆம் தரம் |

1.2 **பதவிக்குரிய கடமைகளின் தன்மை :**

| *பதவிப் பெயர்* | *பணிகள்* |
|---|---|
| வெளிக்கள காவலாளி (Field Watcher) | I. களத்துடன் தொடர்புடைய, களஞ்சியபொருட்கள், இயந்திர உபகரணங்கள் மற்றும் வாகனங்கள் உள்ள வளாகங்களைப் பாதுகாத்தல்.<br>II. களத்துடன் தொடர்புடைய, களஞ்சியபொருட்கள், இயந்திர உபகரணங்கள் மற்றும் வாகனங்கள் உள்ள வளாகங்களைப் பாதுகாத்தல்.<br>III. பகல் அல்லது இரவு ஆயினும்12 மணி நேரம் வேலை செய்தல்<br>IV. தனதுபொறுப்பில் உள்ள சொத்துக்களுக்கு ஏற்படும் சேதங்கள் குறித்து அறிந் திருத்தல்.<br>V. பதவி தொடர்பாக நிறுவனத் தலைவரால் ஒதுக்கப்படும் பிற கடமைகள் |
| சுத்திகரித்தல் மற்றும் உதவியாளர் (Cleaner and Helper) | I. பொருட்களை ஏற்றுதல் மற்றும் இறக்குதல்.<br>II. அவற்றை அந்தந்த இடங்களில் பாதுகாப்பாக வைத்தல்.<br>III. இறக்கிய பிறகு லொரியை முழுமையாக சுத்தம் செய்தல் மற்றும் கழுவுதல்.<br>IV. லொரிகளில் உராய்வு எண்ணெய்/லூப்ரிகண்டுகளைப் பயன்படுத்த வேண்டிய இடங்களை அறிந்து, அந்த இடங்களில் உராய்வு எண்ணெய்/லூப்ரிகண்டுகளைச் சரியாக பயன்படுத்துதல்<br>V. லொரி நடத்துநரின் கடமைகளில் உதவுதல் மற்றும் தேவைப்படும்போது வாகனத் தைப் பாதுகாத்தல்.<br>VI. பதவி தொடர்பாக நிறுவனத் தலைவரால் ஒதுக்கப்படும் பிற கடமைகள் |
| ஆய்வுகூட பணியாளர் (Laboratory Attendant) | I. ஆய்வுகூடத்திற்குக் கொண்டு செல்லும் இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் கருவிகள், கல், மணல், மண், செங்கல், இரும்பு மற்றும் கொங்கிரீட் மாதிரிகள் போன்ற பொறியியல் பொருட்களை எப்போதும் பரிந்துரைக்கப்பட்ட முறையில் இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் கருவிகளை நிறுவுதல்.<br>II. ஆய்வுகூடத்திற்கு உதவியாளர்களின் அறிவுறுத்தல்களின் பேரில் கொண்டு வரப்படும் மண் மற்றும் நீர் மாதிரிகளை பேக்கேஜிங் செய்து பதப்படுத்துதல்.<br>III. பகுப்பாய்வு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள், கண்ணாடிப் பொருட்கள் மற்றும் இரசாயனங்களை தொடர்புடைய இடங்களுக்கு எடுத்துச் சென்று பேக்கேஜிங் செய்தல்.<br>IV. வெளிக்கள கடமைகளுக்குரிய புவியியல் ஆய்வுகள் அல்லது சீமேந்து மற்றும் திரவம் சார்ந்த வெட்டுதல் (Wet Slurry Cutting)அல்லது மேற்பரப்பு சீமேந்து பூச்சு வேலைகளுக்குத் தேவையான இயந்திரங்கள் மற்றும் அனைத்து உபகரணங்கள் மற்றும் கருவிகளில் உள்ள பழுதுகளைக் கண்டறிந்து சரிசெய்தல்.<br>V. துளையிடும் கருவிகள், நீர் பம்பிகள் மற்றும் பிற இயந்திரங்களை நிறுவும் திறன் மற்றும் தேவைக்கேற்ப உயர் அழுத்த நீர் அமைப்புகளைத் தயாரிக்கும் திறன்<br>VI. ஆராய்ச்சி மாதிரிகள் மற்றும் நிர்மான மாதிரி ஆய்வு நடவடிக்கைகளில் அதிகாரிக்கு உதவுதல். வேலைத்தளங்களில் அடிப்படை தயாரிப்புகளை மேற்கொள்ளுதல்<br>VII. பதவி தொடர்பாக நிறுவனத் தலைவரால் ஒதுக்கப்படும் பிற கடமைகள் |

| *பதவிப் பெயர்* | *பணிகள்* |
|---|---|
| ஆய்வுகூடதொழிலாளி<br>Laboratory Labourer | I. ஆய்வுகூடத்தில்/களங்களில் மாதிரிகள் தயாரித்தல் பெற்றுக்கொள்ள உதவுதல்.<br>II. மாதிரிகளின் சோதனையின் போது தேவையான உதவிகளை வழங்குதல்.<br>III. உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களை ஆய்வுகூடத்தை தினமும்/சோதனைகளுக்குப் பிறகு சுத்தம் செய்தல்.<br>IV. ஆய்வுகூடத்தை மற்றும் சுற்றியுள்ள சூழலை சுத்தமாக வைத்திருத்தல்.<br>V. மாதிரிகள்/உபகரணங்கள்/கருவிகள் கொண்டு செல்வதில் உதவுதல்<br>VI. தேவைப்படும்போது உயர் அதிகாரிகளின் உத்தரவுப்படி செயல்படுதல்.<br>VII. பதவி தொடர்பாக நிறுவனத் தலைவரால் ஒதுக்கப்படும் பிற கடமைகள் |
| கிரீசர் (Greaser) | I. இயந்திரங்கள் மற்றும் வாகனங்களில் கிரீஸ்/லூப்ரிகண்டுகளைப் பயன்படுத்த வேண்டிய இடங்களைக் கண்டறிந்து, அவற்றை பொருத்தமான நேரங்களில் பயன்படுத்துதல்.<br>II. இயந்திரங்களை பழுதுபார்ப்பதில் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு உதவுதல்.<br>III. இயந்திரங்களை சுத்தம் செய்தல் மற்றும் பாதுகாத்தல்.<br>IV. ஒபரேட்டருக்கு/செயற்படுத்துனருக்கு உதவுதல்.<br>V. பதவி தொடர்பாக நிறுவனத் தலைவரால் ஒதுக்கப்படும் பிற கடமைகள் |
| திட்ட அச்சுப்பதிப்பாளர்/<br>உதவியாளர்<br>(Plan Printer / Helper) | I. நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு உரிய அனைத்துத் திட்டங்கள் மற்றும் வரைபடங்களை அச்சிடுதல்.<br>1. அச்சிடும் நடவடிக்கைகளை ஆவணப்படுத்துதல் மற்றும் அந்த ஆவணங்களைப் புதுப்பித்தல்.<br>2. அந்த அச்சுப்பொறிகளைப் பாதுகாத்து பராமரித்தல்.<br>II. நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு உரிய ரிஸோ மாதிரிகளை அச்சிடுதல்.<br>III. நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு உரியதான ஓஃப்செட் அச்சிடுதல்.<br>1. அச்சிடும் செயல்பாடுகளை ஆவணப்படுத்துதல் மற்றும் அந்த ஆவணங்களைப் புதுப்பித்தல்<br>2. அந்த அச்சுப்பொறிகளைப் பாதுகாத்து பராமரித்தல்.<br>IV. புத்தகங்கள் மற்றும் ஆவணங்களின் (Binding and Laminating) லேமினேட்டிங் மற்றும் பிணைப்புசெய்தல்.<br>V. பதவி தொடர்பாக நிறுவனத் தலைவரால் ஒதுக்கப்படும் பிற கடமைகள். |

02. **ஆட்சேர்ப்பு முறை :**

2.1. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர். இந்த நேர்முகப் பரீட்சையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைக் கருத்திற்கொண்டு தகைமைகள் பரீட்சிக்கப்படும்.

| *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புகள்* | *அதிகபட்ச புள்ளிகள்* |
|---|---|
| மேலதிக தொழில்சார் தகைமைகள் | 25 |
| அனுபவம் | 40 |
| தொழில்சார் தகைமைகள் | 20 |
| பாட விதானத்துக்கு அப்பாற்பட்ட செயற்பாடுகள் | 10 |
| நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை | 05 |
| **மொத்தம்** | **100** |

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் பெற்றுக்கொண்ட திறமை ஒழுங்கில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரர்களில் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

03. **சம்பள அளவுத்திட்டம் :**

இலக்கம் 10/2025 மற்றும் 2025.03.25 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் PL 02-2025 சம்பளக் குறியீடு இந்த பதவிக்குரியது என்பதுடன் அதற்குரிய சம்பள அளவுத்திட்டம் ரூ. 40,000.00 - 10 X 450 - 10 X 490 - 12 X 540 - 12 X 590 - ரூ. 61,880.00 ஆகும். இந்த சம்பளம் தங்களுக்கு உரித்தாவது 2027.01.01 ஆம் திகதியிலிருந்து என்பதோடு நியமனம் அமுலுக்கு வரும் திகதியிலிருந்து தங்களுக்கு அந்த சுற்றறிக்கையின் அட்டவணை III இன் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

04. **சேவையில் அமர்த்துவதற்கான நிபநந்தனைகள் மற்றும் சேவை நிபநந்தனைகள் :**

I. இப்பதவி நிரந்தரமானது, இருப்பினும் இது தாங்களுக்கு மூன்று (03) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும்.

II. இப்பதவி ஓய்வூதியமுடையதாகும். தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் பற்றி அரசாங்கத்தினால் தொடர்ந்தேர்ச்சையாக எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானங்களுக்கு உட்படல்வேண்டும்.

III. உரிய பதவியில் நிரந்தரமாக்கப்படுவதற்கு III ஆந் தரத்தில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு மூன்று (03) வருடங்களுக்குள் ஆடசேர்ப்புத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியெய்திருத்தல் வேண்டும்.

IV. அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 18/2020 மற்றும் அதற்கு இடைநேர் விளைவான சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப உரிய மட்டத்தில் அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

V. அரச சேவையில் நியமனங்களை நிர்வகிக்கும் பொதுவான நிபந்தனைகள், நீர்ப்பாசனத் திணைக் களத்தில் முதன்மை அரை திறமையுள்ள சேவைத் தொகுதிக்கான ஆட்சேர்ப்புத் திட்ட விதிகள் மற்றும் அவ்வப்போது அதில் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள், தாபனக் விதிக் கோவை மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் பொது சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் ஆகியவற் றின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும்.

05. **வயதெல்லை :**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற் படாமலும் இருத்தல் வேண்டும்.

06. **தேவைப்படும் தகைமைகள் :**

6.1 **கல்வித் தகைமைகள் :**

கல்விப் பொதுத் தராதர (சா.தர)ப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் குறைந்தபட்சம் இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 28/2016 இற்கிணங்க தேசிய தொழிற்கல்வித் தகைமை களைப் (NVQ 3)பெற்றிருக்க வேண்டும்.

6.2 **தொழில்சார் தகைமைகள் :**

பதவிதொடர்பாக பெற்றுக்கொண்டுள்ள தொழில் சார் தகைமைகள் விசேட தகைமைகளாக கருதப் படும்.

6.3 **அனுபவம் :**

பதவி தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட அனுப வம் விசேட தகைமையாக கருதப்படும்.

6.4 **உடல் மற்றும் உள ரீதியான தகைமைகள்:**

விண்ணப்பதாரிகள் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணிபுரிவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உடல், உள ஆரோக்கியத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

6.5. **ஏனைய தகைமைகள்:**

I. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.

II. சிறந்த நன்நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

III. விண்ணப்பதாரிகள் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான தகைமைகள் பூர்த்தி செய்துள்ளதாக ஏற்றுக்கொள்வது விண்ணப்ப தாரிகள் இவ் அறிவித்தலில் 05 மற்றும் 06 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் **2025, ஒற்றோபர் மாதம் 26 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர்** சகல விதத்திலும் பூர்த்தி செய்திருந்தால் மட்டுமே ஆகும். தகைமைகளை உறுதிபடுத்த உரிய சான்றிதழ் களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

7. **விண்ணப்பம் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் :**

I. இந்த அறிவிப்பின் இறுதியில் வழங்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின்படி, விண்ணப்ப தாரர் 21X29 செ.மீ (A4) அளவுள்ள தாளின் இருபுறமும் பயன்படுத்தி விண்ணப்பப் படிவத்தைத் தயாரிக்க வேண்டும். இலக்கம் 1 முதல் 3 வரை முதல் பக்கத்திலும், இலக்கம் 4 முதல் 5 வரை இரண்டாவது பக்கத்திலும், இலக்கம் 6 முதல் 8 வரை மூன்றாவது

பக்கத்திலும், இலக்கம் 9 நான்காவது பக்கத்திலும் இடம்பெறும் வகையில் விண்ணப்பப் படிவம் தயாரிக்கப்பட வேண்டும்.

II. விண்ணப்பங்கள் நேர்முகப் பரீட்சைக்குத் தோன்றும் மொழியில் மட்டுமே தயாரிக்கப்பட வேண்டும்.

III. ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டால், ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

IV. விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் போது ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் விண்ணப்பம் மற்றும் நேர்முகப் பரீட்சைக் கட்டணமாக ரூ. 500.00 செலுத்துவது கட்டாயமாகும். இது நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம், இலங்கை வங்கி, வைத்தியசாலை வீதி, கொழும்பு 01, தப்ரோபேன் கிளை என்ற பெயரில் பராமரிக்கப்படும் கணக்கு இலக்கம் 7042385 இல் வரவு வைக்கப்பட்டு அதன் பற்றுச்சீட்டு விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

V. உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க மற்றும் முறையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் எந்த அறிவிப்பும் இன்றி நிராகரிக்கப்படும்.

VI. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமைப் பற்றி அறிவிக்கப்படமாட்டாது. தபாலில் தொலைந்து போன விண்ணப்பங்கள் தொடர்பான எந்தவொரு முறைப்பாடுகளும் பரிசீலிக்கப்படமாட்டாது.

VII. நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக வழங்கப்படும் கடிதங்கள், விண்ணப்பதாரர் இந்தப் பதவிக்கான தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளதாக கருதப்படமாட்டாது.

VIII. விண்ணப்பத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பத்தை, அரச பாடசாலையின் தலைமை ஆசிரியர்/ ஓய்வு பெற்ற அதிகாரி, பிரதேசத்தின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், வழக்கறிஞர், பொது நொத்தாரிசு முப்படைகளின் அதிகாரி, அரச அல்லது மாகாண பொது சேவையில் உள்ள அதிகாரி அல்லது நிரந்தர பதவிநிலை உத்தியோகத்தர் அல்லது ஒரு பௌத்த விகாரையின் தலைமை தேரர் அல்லது தலைமை வணக்கத்திற்குரிய தேரர் அல்லது வேறு மதத்தின் வழிபாட்டுத் தலத்திற்குப் பொறுப்பான ஒருவர்அல்லது மதகுருமார்கள் சங்கத்தில் குறிப்பிடத்தக்க பதவியை வகிக்கும் ஒருவர் ஆகியோரால் உறுதிசெய்யப்பட வேண்டும்.

IX. விண்ணப்பம் அடங்கிய உறையின் இடதுபக்க மேல் மூலையில்,தாங்கள் விண்ணப்பிக்கும் பதவிக்கு ஏற்ப. "நீர்ப்பாசனத் திணைக்களத்தின் வெற்றிடமாகவுள்ள ஆரம்ப தேர்ச்சியற்ற சேவைத் தொகுதியின் ............. ...................பதவிக்கான (உதாரணமாக:வெளிக்கள காவலாளி, சுத்தப்படுத்துனர்/ உதவியாளர் திறந்த ஆட்சேர்ப்பு - 2025" என்று தெளிவாகக் குறிப்பிட்டு, 2025, ஒற்றோபர் மாதம் 26 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம், நீர்ப்பாசனத் திணைக்களம், 230, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் மட்டுமே அனுப்ப வேண்டும்.

8. **பொய்யான தகவல்களை சமர்ப்பித்தல் :**

விண்ணப்பத்தினை நிரப்பும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை சமர்ப்பித்தல் வேண்டும். பரீட்சார்த்தியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் தவறானது அல்லது பொய்யானது என ஆட்சேர்ப்பதற்கு முன்னர் நிரூபிக்கப்பட்டால் தங்களது பரீட்சார்த் தன்மையை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பரீட்சார்த்தியினால் சமர்ப் பிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் தவறானது அல்லது பொய்யானது என ஆட்சேர்க்கப்பட்ட பின்னர் நிரூபிக்கப்பட்டால் நியமனம் இரத்துச் செய்யப்பட அல்லது அரச சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்வதற்குரிய நடவடிக்கையும் எடுக்கப்படும்

9. **நேர்முகப் பரீட்சை நடாத்துதல் :**

2025, நவெம்பர் மாதத்தில் கொழும்பில் மாத்திரம் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நேர்முகப் பரீட்சை நடைபெறும்

10. இதில் குறிப்பிடப்படாத எந்தவொரு விடயமாக இருப்பினும் அது தொடர்பாக நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தால் முடிவு செய்யப்படும்.

11. இந்த அறிவித்தலில் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடு காணப்பட்டால், சிங்கள மொழியே செல்லுபடியானதாக கருதப்படும்.

எந்திரி அஜித் குணசேகர,
நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம்.

நீர்ப்பாசனத் திணைக்களம்,
பௌத்தலோக மாவத்தை,
கொழும்பு 07,
2025, செத்தெம்பர் 25.

(அலுவலக உயோகத்திற்கு மாத்திரம்)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஆரம்ப தேர்ச்சியற்ற சேவைத் தொகுதியின் .................(III பதவிக்காக திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல் - 2025**

**The Application for the Open Basis Recruitment to the Post of the Service Category of Primary Level Unskilled ……………………….. (III) in the Irrigation Department -2025**

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 1
தமிழ் - 2

1.0 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : ………………………………………………………………….
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)
1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் : ………………………………………………………………….
(சிங்களத்தில்/ தமிழில்)
1.3 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் : ……………………………………………………………………..
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)
1.4 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் : ……………………………………………………………………...
(சிங்களத்தில்/ தமிழில்)
1.5 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :
1.6 பெண் ஆண் பற்றி
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.) பெண் 1
ஆண் 2

2.0 2.1 நிரந்தர முகவரி :………………………………………………………………………………………………
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)
2.2 நிரந்தர முகவரி :………………………………………………………………………………………………
(சிங்களத்தில்/ தமிழில்)
2.3 பரீட்சை அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி :
(i) (சிங்களத்தில்/ தமிழில்) : …………………………………………………..........................……………………….
(ii) (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ………………………………………………………………….......................
2.4 தொலைபேசி இலக்கம் : தனிப்பட்ட ……………………………….................…

3.0 3.1 திருமணமானவர்/ திருமணமாகாதவர் பற்றி :

திருமணமாகாதவர் 1
திருமணமானவர் 2

3.2 பிறந்த திகதி :
உரிய கூட்டினுள் எழுதவும்.

வருடம் : மாதம் : திகதி :

3.3 விண்ணப்பம் கோரப்படும் இறுதித்தினத்திற்கு வயது : .......................

வருடம் : மாதம் : நாள் :

3.4 நீங்கள் ஒரு இலங்கை பிரசையா, பிறப்பின் மூலமா? பதிவின் மூலமா? : ............................................................

4.0 கல்வித் தகைமைகள் :

4.1 க. பொ. த. (சா. த.) பரீட்சை பற்றிய விபரம்

I. பரீட்சையின் வருடமும் மாதமும் ;……………………

II. சுட்டெண் : …………………….

| *பாடங்கள்* | *தரம்* | *பாடங்கள்* | *தரம்* |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

4.2 க. பொ. த. (சா. த.) பரீட்சை பற்றிய விபரம்

I. பரீட்சையின் வருடமும் மாதமும் ;……………………

II. சுட்டெண் : …………………….

| *பாடங்கள்* | *தரம்* | *பாடங்கள்* | *தரம்* |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

4.3 தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம்:

…………………………………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………

5.0 தாங்கள் ஏதேனும் குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் குற்றத்திற்காக தண்டனைப்பெற்றுள்ளீரா?
(உரிய கூட்டினுள் ( ✓ ) அடையாளமிடுக )

| ஆம் | | | இல்லை | |
|---|---|---|---|---|

அவ்வாறு தண்டனைப்பெற்றிருப்பின் அது என்ன குற்றத்திற்காக எந்த நீதிமன்றத்தினால் என்ன தண்டனைப்பெறப்பட்டது என்ற தகவலைத்தருக ……………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………

6.0 பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு

பற்றுச்சீட்டு இலக்கம் .............................................. திகதி ........................................

| பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும் |
|---|

7.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை:

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் எனது அறிவுக்கெட்டிய வரை சரியானதும் உண்மையானதும் என உறுதி கூறுகிறேன். இதில் ஏதாவது ஒரு பிரிவு பூரணப்படுத்தப்படாமல் அல்லது தவறாக பூரணப்படுத்தி இருப்பின், அதனால் ஏற்படும் இழப்பினை ஏற்றுக் கொள்ளவும் உடன்படுகிறேன். மேலும் இங்கு தரப்பட்டுள்ள அனைத்து தகவல்களும் உண்மையானதெனவும் உறுதி கூறுகிறேன்.

(ஆ) நேர்முகப் பரீட்சை நடத்துவது தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்குக் கட்டுப்படவும், நேர்காணலுக்கு முன்னரோ அல்லது பின்னரோ, இந்த நிபந்தனைகளின் கீழ் நான் தகுதியற்றவன் எனக் கண்டறியப்பட்டால், எனது விண்ணப்பத்தை இரத்து செய்ய எடுக்கப்பட்ட எந்தவொரு முடிவையும் ஏற்றுக்கொள்வதற்கும் நான் ஒப்புக்கொள்கிறேன்.

(இ) என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என நியமனம் செய்யப்படுவதற்கு முன்னர் நிரூபிக்கப்பட்டால், தகைமையற்றவர் எனவும், நியமிக்கப்பட்ட பின்னர் எனின், பதவியிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நன்கறிவேன்

(ஈ) இங்கு வழங்கப்பட்ட எந்த தகவலையும் நான் பின்னர் மாற்ற மாட்டேன்.

திகதி : …………………….. ……………………………………
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்** :

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/ செல்வி ................................................................................ என்பவரைத் தனிப்பட்ட ரீதியில் அறிவேன் எனவும் அவர் ....................................................... ஆந் திகதி எனது முன்னிலயில் தனது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதியளிக்கின்றேன்.

......................................................
கையொபபத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின்
கையொப்பம் மற்றும் அலுவலக முத்திரை

திகதி : ..........................
உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் பெயர் : .............................................
பதவி : ..........................................................
முகவரி : ...........................................................

9.0 திணைக்கள/ நிறுவனத் தலைவரின் சான்றிதழ்
(தற்போது சேவையிலுள்ளவர்களுக்கு மட்டும்)

திரு./ திருமதி/ செல்வி …………………………………… என்பவர் ................................................. சேவையிலுள்ள பதவியை வகிக்கின்றார் எனவும் அவர் வழங்கியுள்ள தகவல்கள் சரியானது எனவும் உறுதி கூறுகின்றேன். இப்பதவிக்காக இவர் தெரிவு செய்யப்பட்டால் ..................... சேவையிலிருந்து அவரை விடுவிக்க முடியும்/ முடியாது எனவும் மேலும் உறுதியளிக்கின்றேன்.

......................................................
திணைக்களத்தலைவரின் கையொப்பம் மற்றும்
அலுவலக முத்திரை

திகதி : ..........................

09-295

## விவசாய, கால்நடைகள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கீழுள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் ஆரம்ப அரைத் தேர்ச்சிபெற்ற சேவைத் தொகுதியின் கீழ் பதவிகளுக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல் -2025

1. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் **ஆரம்ப அரைத் தேர்ச்சிபெற்ற சேவைத் தொகுதியின் கீழ் பதவிகளுக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்காக** நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்காக நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம் அவர்களால் 2025 நவெம்பர் மாதம் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1.1 **ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் பதவிகள் :**

| *தொடர் இலக்கம்* | *பதவிப் பெயர்* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* | *ஆட்சேர்க்கும் தரம்* |
|---|---|---|---|
| 01 | செயற்படுத்துனர் (Operator) | 39 | III ஆம் தரம் |
| 02 | ட்ரக்டர் செயற்படுத்துனர் (Tractor Operator) | 8 | III ஆம் தரம் |
| 03 | மின் வல்லுநர் (Electrician) | 7 | III ஆம் தரம் |
| 04 | இயந்திரவியலாளர் (Mechanic) | 22 | III ஆம் தரம் |
| 05 | வேல்டர் (Welder) | 3 | III ஆம் தரம் |
| 06 | உலோக வேலையாள் (Tinker) | 11 | III ஆம் தரம் |
| 07 | வர்ணம் தீட்டுபவர் (Painter) | 5 | III ஆம் தரம் |
| 08 | லேத்மன் (Latheman) | 2 | III ஆம் தரம் |
| 09 | பொறுத்துனர் (Fitter) | 4 | III ஆம் தரம் |
| 10 | மெக்கானிஸ்ட் (Machinist) | 4 | III ஆம் தரம் |
| 11 | கொல்லர் (Blacksmith) | 3 | III ஆம் தரம் |
| 12 | பராமரிப்பு மற்றும் செயற்பாட்டுப் பணியாளர் (Maintenance & Operating Labourer) | 63 | III ஆம் தரம் |
| 13 | நீர் பம்பி இயக்குநர் (Pump Operator) | 10 | III ஆம் தரம் |
| 14 | கொத்தன் (Mason) | 6 | III ஆம் தரம் |
| 15 | தச்சர் (Carpenter) | 4 | III ஆம் தரம் |
| 16 | நீர் குழாய் பொறுத்துனர் (Plumber) | 1 | III ஆம் தரம் |
| 17 | உபகரண பொறுப்பாளர் (Instrument Artificier) | 1 | III ஆம் தரம் |
| 18 | உபகரணங்கள் பழுதுபார்ப்பவர் (Instrument Repairer) | 2 | III ஆம் தரம் |
| 19 | நீரியல் அளவீட்டு உதவியாளர் (Hydrological Survey Labourer) | 26 | III ஆம் தரம் |
| 20 | சுற்றுளா பங்களா பராமரிப்பாளர் (Circuit Banglow Keeper) | 5 | III ஆம் தரம் |
| 21 | களஞ்சியசாலை பணியாளர் (களஞ்சியசாலை உதவியாளர்) (Store Aide) | 30 | III ஆம் தரம் |
| 22 | பொறுத்துனர் (Fitter) | 2 | III ஆம் தரம் |

1.2 **பதவிக்குரிய கடமைகளின் தன்மை :**

| *பதவிப் பெயர்* | *பணிகள்* |
|---|---|
| செயற்படுத்துனர் (Operator) | நீர்ப்பாசனத் திணைக்களத்தில் கட்டுமான நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் லொறிகள், கிரோலர்கள், டிரக்டர்கள், இறப்பர்-டயரிலான டிரக்டர்கள், டம்ப் டிரக்குகள், பக்கெட் ஸ்கிரேப்பர்கள்இரோட் ரோலர்கள், மோட்டார் கிரேடர்கள், கனரக லோடர்கள், பெக்ஹோ எக்ஸ்கவேட்டர்கள் (ஷவர்/ட்ரேக் லைன்/பேக்ஹோ/ கிளாம் ஷெல்/கிரேன்/பைல் டைவர்) மற்றும் டிரப்பர்கள் ஆகிய இயந்திரங்களில் ஏதேனும் 3 வகை இயந்திரங்களை இயக்குவதற்கு பின்வரும் தகுதிகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்:<br>I. சேவிஸ் செய்தல் பிழைகள் இருப்பின் கண்டறிதல், உள்ளடங்களாக கருவிகளின் செயல்படுத்தல், பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பராமரிப்பு பற்றிய அறிவு,<br>II. மண் அள்ளும் கருவிகள் மற்றும் இயந்திரங்களை இயக்குபவர்களுக்கான அனைத்து சோதனைகளிலும் உபகரணங்களை திறமையாக இயக்கும் திறன் இருத்தல்.<br>II. விசேட கள நிலைமைகளின் கீழ் தொடர்புடைய இயந்திரத் தைப் பயன்படுத்துவது குறித்த அறிவு இருத்தல்.<br>IV. மண்ணைத் தளர்த்துதல், மண் வெட்டுதல், ஏற்றுதல், தள்ளுதல் மற்றும் இழுத்தல் ஆகியவற்றிற்குப்பயன்படுத்தப்படும் உபகரணங்கள் குறித்த அறிவு இருத்தல்.<br>V. பதவி தொடர்பாக நிறுவனத் தலைவரால் ஒதுக்கப்படும் பிற பணிகள். |
| ட்ரக்டர் செயற்படுத்துனர் (Tractor Operator) | I. நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கடமைகளுக்கு ஏற்ப கட்டுமானம், செயற்பாடு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் டிரக்டர்களை இயக்குதல்.<br>II. டிரக்டர்கள் மற்றும் டிரெய்லர்களைப் பராமரித்தல், பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல் பற்றிய அறிவு இருத்தல்.<br>III. டிரக்டர்களை ஓட்டுதல், டிரெய்லர்களுக்கு பாரம் ஏற்றுதல் மற்றும் அவற்றை இறக்குதல் போன்ற அனைத்து சோதனைகளிலும் திறமையாக செயல்படும் திறன் இருத்தல்.<br>IV. மலை சரிவுகள் மற்றும் சதுப்பு நிலங்கள் போன்ற கள நிலைமைகளில் செயல்படும் திறன் இருத்தல்.<br>V. பதவி தொடர்பாக நிறுவனத் தலைவரால் ஒதுக்கப்படும் பிற பணிகள். |
| மின் வல்லுநர் (Electrician) | I. 1/64” அளவிடைகளில் வாசிக்கும் திறன்.<br>II. தொழிலுடன் தொடர்புடைய கருவிகளின் பெயர்கள், பயன்பாடு மற்றும் அவற்றைப் பராமரித்தல் பற்றிய அறிவு.<br>III. எளிய வரைபடங்களைப் படித்துப் புரிந்துகொள்ளும் திறன்.<br>IV. மோட்டார் வாகனத்தில்உள்ள மின் கூறுகள் பற்றிய அறிவு.<br>V. அனைத்து வேலைகளிலும் பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகள் பற்றிய அறிவு.<br>VI. வயரிங் வேலைகள் (மின் பிளக்குகள்) பற்றிய அறிவு.<br>VII. அனைத்து வகையான வீட்டு சேவை மீட்டர்களையும் வாசித்து அதிகபட்ச தேவை சென்சார்களை மீட்டமைக்கும் திறன்.<br>VIII. திணைக்களத்தினால் பின்பற்றப்படும் அனைத்து பாதுகாப்பு விதிமுறைகளிலும் தேர்ச்சி இருத்தல்.<br>IX. மீட்டர்களின் செயல்பாடு குறித்த நல்ல அறிவு இருத்தல்.<br>X. எளிய கணக்கீடுகள் குறித்த அறிவு.<br>XI. இயந்திரங்கள், வாகனங்கள் மற்றும் வீட்டு மின்சுற்றுகளை பழுது பார்ப்பதில் அனுபவம், மற்றும் குறைபாடுகள் மற்றும் அவற்றின் காரணங்களைக் கண்டறியும் திறன்.<br>XII. பதவி தொடர்பாக நிறுவனத் தலைவரால் ஒதுக்கப்படும் பிற பணிகள். |

| *பதவிப் பெயர்* | *பணிகள்* |
|---|---|
| இயந்திரவியலாளர் (Mechanic) | I. நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள மோட்டார் வாகனங்கள், இயந்திரங்கள், பம்பிங் நிலையங்கள் மற்றும் பல்வேறு இயந்திரங்களுக்குத் தேவையான பழுதுபார்ப்புகளை மேற்கொள்ளுதல்.<br>II. பிழைகள் ஏற்படும் போது அவற்றைக் கண்டறியும் அவசியம் மற்றும் திறன்<br>III. பழுதடைந்த சாதனங்களைக் கண்டறிந்து அந்த சாதனங்களை வாங்குவதற்கு அல்லது பழுதுபார்க்க பரிந்துரைக்கும் திறன்.<br>IV. புதிய சாதனங்களைப் பயன்படுத்தி பிழைகளைச் சரிசெய்யும் திறன்.<br>V. பதவி தொடர்பாக நிறுவனத் தலைவரால் ஒதுக்கப்படும் பிற பணிகள். |
| வேல்டர் Welder | I. வெல்டிங் வேலையில் பயன்படுத்தப்படும் பல்வேறு வகையான உபகரணங்களை அந்தந்த பணிகளுக்கு சரியாகப் பயன்படுத்தி வெல்டிங் வேலையைச் செய்தல்.<br>II. இரும்பு மற்றும் இரும்பு அல்லாத உலோகங்களுக்கு இடையிலான வேறுபாட்டைக் கண்டறிந்து அதற்கேற்ப சரியாக வேலையைச் செய்தல்.<br>III. வெல்டிங் வேலையைச் செய்யும்போது பாதுகாப்பு வழிமுறைகளை முறையாகப் பயன்படுத்துதல்.<br>IV. பதவி தொடர்பாக நிறுவனத் தலைவரால் ஒதுக்கப்படும் பிற பணிகள். |
| உலோக வேலையாள் (Tinker) | I. 1/32" அளவிடைகளில் வாசிக்கும் திறன்.<br>II. தொழிலில் பயன்படுத்தப்படும் பல்வேறு வகையான உலோகங்களைப் பற்றிய நல்ல அறிவு.<br>III. ஈயத்துடன் வெல்டிங், பிற உலோகங்களுடன் வெல்டிங் மற்றும் ரிவெட்டிங் பற்றிய நல்ல அறிவு<br>IV. பெண்டிங் மற்றும் கேவ்-கட்டிங் (டீநனெிபெ யனெ உரசஎந உரவவபெ) இயந்திரங்களை இயக்கும் திறன்<br>V. பதவி தொடர்பாக நிறுவனத் தலைவரால் ஒதுக்கப்படும் பிற பணிகள். |
| வர்ணம் தீட்டுபவர் (Painter) | I. வாசிக்கவும் எழுதவும் திறன் இருத்தல்.<br>II. பழைய வர்ணம் பூசப்பட்ட பழைய மேற்பரப்புகளைக்கொண்ட ஒரு (Blow Lamp) விளக்கை சுரண்டுதல் (Sanding) மற்றும் வண்ணப்பூச்சு அகற்றுதலைப் பயன்படுத்தி சுத்தம் செய்யும் திறன்,<br>III. பல்வேறு வகையான வண்ணப்பூச்சுகள் மற்றும் வார்னிஷ்கள் பற்றிய அடிப்படை அறிவு.<br>IV. உலோகம், மரம் மற்றும் மேற்பரப்புகளை சுத்தம் செய்து வண்ணம் தீட்டும் திறன் மற்றும் அனைத்து உபகரணங்களையும் பயன்படுத்தும் திறன்.<br>V. பதவி தொடர்பாக நிறுவனத் தலைவரால் ஒதுக்கப்படும் பிற கடமைகள். |
| லேத்மன் (Latheman) | I. உலோக வேலையில் பயன்படுத்தப்படும் கருவிகளை அடையாளம் காணுதல்.<br>II. லேத் இயந்திரங்களுடன் செய்யப்படும் செயல்பாடுகளை (வெட்டும் வேகம் மற்றும் ஊட்ட வளைவுகளைப் பயன்படுத்துவது உட்பட) நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.<br>III. உலோக வேலைக்காக கொடுக்கப்பட்ட எளிய வரைபடங்களைப் படித்தல்.<br>IV. வெர்னியர்கள் மற்றும் மைக்ரோமீட்டர்களிலிருந்து அளவீடுகளைப் படித்தல் மற்றும் அதற்கேற்ப உலோக வேலைகள் (வெட்டுகள்) செய்தல்.<br>V. பதவி தொடர்பாக நிறுவனத் தலைவரால் ஒதுக்கப்படும் பிற கடமைகள். |

| *பதவிப் பெயர்* | *பணிகள்* |
|---|---|
| பொறுத்துனர் (Fitter) | I. 1/64" அளவிடைகளில் வாசித்தல் மற்றும் பின்னங்களில் வெளிப்படுத்தப்படும் நீளம், அகலம் போன்றவற்றைக் குறித்ததல் மற்றும் நுண்ணிய அளவீடுகளை வாசித்தல் பற்றிய அறிவு. |
| | II. தனது தொழிலுடன் தொடர்புடைய அனைத்து உபகரணங்களின் பெயர்கள், பயன்பாடு மற்றும் களஞ்சியப்படுத்தல் பற்றிய நல்ல அறிவைப் பெற்றிருத்தல். |
| | III. நீராவி மொட்டோ டீசல் மற்றும் விலிரைட் சிறப்பு வகை வெல்டிங் வேலைகள் குறித்த நல்ல அறிவு பெற்றிருத்தல். |
| | IV. திறமையாக ஒழுங்கமைக்கும் திறன் இருத்தல். |
| | V. பதவி தொடர்பாக நிறுவனத் தலைவரால் ஒதுக்கப்படும் பிற கடமைகள். |
| மெக்கானிஸ்ட் (Machinist) | I. திணைக்களம் சார்ந்த தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் அரைக்கும் இயந்திரங்கள், வடிவமைக்கும் இயந்திரங்கள், துளையிடும் இயந்திரங்கள் போன்ற இயந்திரங்களில் குறைந்தது இரண்டு இயந்திரங்களிலேனும் திறமையாக செயல்படுதல்.<br>II. மேற்குறிப்பிட்ட இயந்திரங்களுக்கான பல்வேறு துணைக்கருவிகளை இணைத்துசெயற்டுத்தல்.<br>III. மேற்கண்ட இயந்திரங்களுடன் தொடர்புடைய பல்வேறு கருவிகளைப் பயன்படுத்துதல்.<br>IV. மேற்கூறிய இயந்திரங்களால் செய்யப்படும் பணிகளுக்குக் கொடுக்கப்பட்ட எளிய வரைபடங்களைப் படித்தல்.<br>V. வேர்னியர்கள் மற்றும் மைக்ரோமீட்டர்களிலிருந்து அளவீடுகளைப் படித்தல் மற்றும் அந்த அளவீடுகள் தொடர்பாக மேற்கண்ட இயந்திரங்களைப் பயன்படுத்தி தேவையான வேலையை முடித்தல்.<br>VI. திணைக்களத்திற்குச் சொந்தமான தான் பணிபுரியும் தொழிற்சாலையில் நிறுவப்பட்ட மேற்கண்ட இயந்திரங்களையும், அந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படும் பிற சாதனங்கள் மற்றும் உபகரணங்களையும் தனது பொறுப்பில் வைத்திருக்கவும், பயன்படுத்தல் மற்றும் பாதுகாத்தல்.<br>VII. பதவி தொடர்பாக நிறுவனத் தலைவரால் ஒதுக்கப்படும் பிற கடமைகள். |
| கொல்லர் (Blacksmith) | I. எழுதவும் வாசிக்கவும் திறன் இருத்தல்<br>II. கொல்லன் வேலைக்குத் தேவையான கருவிகள் பற்றிய அறிவு<br>III. தனது தொழிலுக்கு உரியதான ஆயுதங்களின்/கருவிகளின் பெயர்களைப் பயன்படுத்தல் அவற்றை வைத்திருக்கும் பழக்கம் இருத்தல்.<br>IV. தொழிலில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் உலோகங்கள் மற்றும் பிற பொருட்கள் பற்றிய அறிவு.<br>V. உலைகளை எவ்வாறு உருவாக்குவது மற்றும் பராமரிப்பது என்பது பற்றிய அறிவு.<br>VI. பொதுவான உலோக வேலைப்பாடு பற்றிய அறிவு.<br>VII. பதவி தொடர்பாக நிறுவனத் தலைவரால் ஒதுக்கப்படும் பிற கடமைகள். |

| *பதவிப் பெயர்* | *பணிகள்* |
|---|---|
| பராமரிப்பு மற்றும் செயற்பாட்டுப் பணியாளர் (Maintenance & Operating Labourer) | I. பாரிய/நடுத்தர அளவிலான நீர்த்தேக்கங்களின் அணைகள், அணைக்கட்டுகள் மற்றும் கசிவு பாதைகளின் வழக்கமான பராமரிப்பு மற்றும் செயல்பாடுகள்.<br>II. நீர் கட்டுப்பாடு/ பரிபாலன நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.<br>III. பருவ மழைக்காலங்களின் போது நீர்ப்பாசன அமைப்பு உள்கட்டமைப்பு வேலை மற்றும் நீர்ப்பாசன அமைப்புகளை வெள்ளத்தில் இருந்து பாதுகாத்தல் மற்றும் நீர்ப்பாசனக் கட்டுப்பாட்டு கதவுகளை முறையாகவும் பாதுகாப்பாகவும் திறத்தல். |
| | IV. பிரதான மற்றும் கிளை கால்வாய்களை சுத்தம் செய்தல்இ சிறிய பழுதுபார்ப்புகள், வாயில்களின் இயந்திர பாகங்களுக்கு எண்ணெய் இடுதல் மற்றும் கிரீஸ் செய்தல், கறைபடியாத வண்ணப்பூச்சுடன் வண்ணம் தீட்டுதல்.<br>V. விவசாய பாதைகள் மற்றும் கட்டிடங்களை மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல்.<br>VI. பதவி தொடர்பாக நிறுவனத் தலைவரால் ஒதுக்கப்படும் பிற கடமைகள். |
| நீர் பம்பி இயக்குநர் (Pump Operator) | I. பம்பினை சரியாக செயற்படுத்தல்.<br>II. மின்சாரம் பற்றிய பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றிய அறிவு.<br>III. பம்பினைசெயற்படுத்துதல் மற்றும் நிறுத்துதல்.<br>IV. பம்பிற்கு எரிபொருள் மற்றும் உராய்வு எண்ணெய் இடுதல்.<br>V. பம்புகளில் உள்ள சிறிய இயந்திர பழுதுபார்ப்புகளை சரிசெய்தல்.<br>VI. பம்பிங் ஸ்டேஷனில் நிறுவப்பட்ட மின் மோட்டார்கள் மற்றும் இயந்திரங்களை இயக்குதல்.<br>VII. பகல் அல்லது இரவு என இரண்டு ஷிப்டுகளின்/ முறைகளின் கீழ் வேலை செய்யக்கூடியவராயிருத்தல்.<br>VIII. பதவி தொடர்பாக நிறுவனத் தலைவரால் ஒதுக்கப்படும் பிற கடமைகள். |
| கொத்தன் (Mason) | I. கட்டுமானம் தொடர்பான கட்டமைப்புகளுக்கான குறிப்புகளை வாசித்தல்.<br>II. கட்டுமானம் தொடர்பான கட்டமைப்பு குறிப்புகளை எழுதி சமர்ப்பிக்க முடியுமாயிருத்தல்.<br>III. 1/20 முழு செங்கல் மற்றும் 1 ½ செங்கல் ஆகியவற்றால் ஆன சாதாரணமான பூரண முகப்புகள் மற்றும் கதவுகள் உள்ளிட்ட செங்கல் கட்டமைப்புகளை உருவாக்கும் திறன் இருத்தல்.<br>IV. பொதுவாகப் பயன்படுத்தப்படும் பிளாஸ்டர் கலவைகளைத் தயாரித்து பயன்படுத்தும் திறன் இருத்தல்.<br>V. பொதுவாகப் பயன்படுத்தப்படும் கொங்கிரீட் கலவைகளைத் தயாரித்து அவற்றிலிருந்து கட்டமைப்புகளை உருவாக்கும் திறன் இருத்தல்.<br>VI. பதவி தொடர்பாக நிறுவனத் தலைவரால் ஒதுக்கப்படும் பிற கடமைகள் |
| தச்சர் (Carpenter) | I. வாசிக்கவும் எழுதவும் திறன்<br>II. 1/16” அளவிடைகளில் வாசிக்கும் திறன்.<br>III. மரவேலை தொடர்பாக தான் பணிக்கமர்த்தப்பட எதிர்பார்க்கப்படும் வேலை வகைகளில் நல்ல அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.<br>IV. பல்வேறு வகையான மரப்பலகைகளின் பண்புகள் மற்றும் பயன்பாடுகள் பற்றிய அறிவு.<br>V. பல்வேறு வகையான பூச்சுகளின் பெயர்கள் மற்றும் பயன்பாடுகள் மற்றும் அவற்றை எவ்வாறு தயாரிப்பது என்பது பற்றிய அறிவு.<br>VI. தனது தொழிலுக்குப் பொருத்தமான எளிய வரைபடங்களைப் படிக்கும் திறன்.<br>VII. பதவி தொடர்பாக நிறுவனத் தலைவரால் ஒதுக்கப்படும் பிற கடமைகள் |

| *பதவிப் பெயர்* | *பணிகள்* |
|---|---|
| நீர் குழாய் பொறுத்துனர் (Plumber) | I. நீர் குழாய்கள் மற்றும் பொருத்துதல்களை நிறுவுதல்.<br>II. நீர் குழாய்கள் மற்றும் பொருத்துதல்களைப் பராமரித்தல்.<br>III. நீர் குழாய் அமைப்புகள் மற்றும் தொடர்புடைய தேவையான பாகங்களை உருவாக்குதல்.<br>IV. நீர்ப்பாசன பணிப்பாளரால் (நீர் வலு/தலைமைப் பொறியியலாளர்/நீர்ப் பாசனப் பொறியியலாளர் /உபகரண மேற்பார்வையாளர்/உதவி உபகரண மேற்பார்வையாளர்/ ஆராய்ச்சி உதவியாளர்) ஒதுக்கப்படும் பிற பணிகள். |
| உபகரண பொறுப்பாளர் (Instrument Artificier) | I. அளவீட்டு கருவிகளின் பழுது பார்த்தல், துல்லியமான அளவுகளை உறுதிப்படுத்தல் மற்றும் பராமரித்தல்.<br>II. பிற உபகரணங்களை பழுதுபார்த்தல் மற்றும் துல்லியத்தை உறுதி செய்வ தற்காகநடவடிக்கை எடுத்தல் மற்றும் பராமரித்தல்.<br>III. உபகரணங்கள் பழுதுபார்ப்பதற்குத் தேவையான உரிய பாகங்களை உருவாக்குதல்.<br>IV. நீர் வலுப் பிரிவின் உயர் அதிகாரிகளின் அறிவுறுத்தலின்படி, உபகரணங்கள் பழுதுபார்க்கும் போது ஏற்படும் சிக்கல்கள் குறித்து உபகரணங்கள் பழுது பார்ப்பவர்களுக்கு ஆலோசனை வழங்குதல்.<br>V. நீர்ப்பாசன பணிப்பாளரால் (நீர் வலு/தலைமைப் பொறியியலாளர்/நீர்ப் பாசனப் பொறியியலாளர் /உபகரண மேற்பார்வையாளர்/உதவி உபகரண மேற்பார்வையாளர்/ ஆராய்ச்சி உதவியாளர்) ……. ஒதுக்கப்படும் பிற பணிகள். |
| உபகரணங்கள் பழுதுபார்ப்பவர் (Instrument Repairer) | I. நுண்ணிய பரிமாணங்களைப் வாசிக்க முடியுமாயிருத்தல்.<br>II. மீட்டரின் செயல்பாடுகள் மற்றும் அதில் உள்ள செயற்பாடுகள் பற்றிய கோட்பாடுகளின் பொதுவான புரிதலைப் பெற்றிருத்தல்.<br>III. ஏதேனும் பழுதடைந்த மீட்டர் அல்லது மீட்டர் கூறுகளில் உள்ள குறைபாட்டை இனங்கண்டு சரிசெய்ய முடியுமாயிருத்தல்.<br>IV. 1/32” அளவுகளில் மற்றும் தனது தொழிலுக்கு பொருத்தமான பிற அளவிடைகள வாசிக்கும் திறன். திட்டத்தில் பயன்படுத்தப்படும் சிறிய கருவிகளைப் பயன்படுத்துவது பற்றிய அறிவு இருத்தல்.<br>V. தொடர்புடைய கருவிகள் மற்றும் மீட்டர் வகைகளை அடையாளம் காண முடியுமாயிருத்தல்.<br>VI. பதவி தொடர்பாக நிறுவனத் தலைவரால் ஒதுக்கப்படும் பிற கடமைகள். |
| நீரியல் அளவீட்டு உதவியாளர் (Hydrological Survey Labourer) | I. தனது வேலை நேரத்தில் ஒவ்வொரு மணித்தியாலத்திற்கு ஒரு முறை அல்லது அறிவுறுத்தப்பட்டபடி வெவ்வேறு நேர இடைவெளிகளில் அல்லது ஆறுகளின் / நீர் நிலைகளின் நீர் மட்டத்தைவாசித்து குறித்தல்.<br>II. வெளியேற்ற அளவீடுகள் மற்றும் பிற புவியியல் அளவீடுகளை மேற்கொள்ளும்போது நீரியல் கள உதவியாளர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குதல்.<br>III. நீர் அளவீட்டு நிலையங்களில் நிறுவப்பட்டுள்ள நிலையத்திற்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து அரச உபகரணங்கள் மற்றும் பொருட்களைப் பாதுகாத்தல் மற்றும் சரியான பராமரிப்பை உறுதி செய்தல்.<br>IV. நீர் அளவீட்டு நிலையத்திற்குச் சொந்தமான நிலம்இ கட்டிடங்கள் மற்றும் அளவீட்டு தூண்களை முறையாக பராமரித்து சுத்தமாக வைத்திருத்தல்.<br>V. நீர் அளவீட்டு நிலையத்திற்குச் சொந்தமான பிற வானிலை கருவிகள் இருப்பின் அவற்றின் அளவீடுகளை வாசித்து பதிவு செய்தல்.<br>VI. நதி நீர் அளவீடுகள் மற்றும் மழைமானி தரவுகளை நீரியல் பிரிவால் தயாரிக்கப்பட்டு வழங்கப்படும் அச்சிடப்பட்ட படிவங்களில் பதிவு செய்தல்.<br>VII. ஆறுகளின் / நதிகளின் நீளம் மற்றும் அகலத்தை அளவிடுவதில் கள அலுவலர்களால் தேவையான உதவியைப் பெறுதல்.<br>VIII. வானொலி தகவல் தொடர்பு சாதனங்களை இயக்குதல்.<br>IX. உபகரணங்கள் செயலிழப்பின்போது அல்லது கனமழை அல்லது வெள்ளம் போன்ற அவசரநிலை ஏற்பட்டால் நீரியல் பிரிவுக்குத் தெரிவித்தல்.<br>X. பதவி தொடர்பாக நிறுவனத் தலைவரால் ஒதுக்கப்படும் பிற கடமைகள். |

| *பதவிப் பெயர்* | *பணிகள்* |
|---|---|
| சுற்றுளா பங்களா பராமரிப்பாளர் (Circuit Banglow Keeper) | I. சுற்றுலா பங்களாவை சுத்தம் செய்து பராமரித்தல்.<br>II. சுற்றுலா பங்களா, அதன் வளாகம் மற்றும் தொடர்புடைய அனைத்து சொத்துக்களையும் பாதுகாத்தல் மற்றும் முறையாக பராமரித்தல்.<br>III. சுற்றுலா பங்களாவிற்கு வருகை தரும் முறையான விருந்தினர்களுக்கு தங்குமிடம், உணவு மற்றும் பிற பொருத்தமான வசதிகளை வழங்குதல்.<br>IV. கடமை தொடர்பான பற்றுச்சீட்டுக்கள், புத்தகங்கள், ஆவணங்கள் போன்றவற்றை முறையாகப் பராமரித்து, அவற்றை உரிய நேரத்தில் மேற்பார்வை அதிகாரியிடம் சமர்ப்பித்தல்.<br>V. சுற்றுலா பங்களாவிற்குச் சொந்தமான பொருட்களைப் பொறுப்பாக இருத்தல்.<br>VI. இப்பதவி 24 மணி நேரமும் பணிபுரியக்கூடிய பொறுப்பான பதவியாகும், அத்தோடு உரிய வளாகத்தில் தங்கியிருக்கவேண்டியபதவியாகும்.<br>VII. பதவி தொடர்பாக நிறுவனத் தலைவரால் ஒதுக்கப்படும் பிற கடமைகள். |
| களஞ்சியசாலை பணியாளர் (களஞ்சியசாலை உதவியாளர்) (Store Aide) | I. பொருட்களை ஏற்றுதல், இறக்குதல் அல்லது தூக்குதல், அடுக்கி வைத்தல் மற்றும் பெக்கிங் செய்தல்.<br>II. களஞ்சிய சாலையில் உள்ள பொருட்களை இனங்காணுதல்.<br>III. களஞ்சிய சாலையில் உள்ள கட்டுமானப் பொருட்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் உதிரி பாகங்களை அவை பயன்பாட்டிற்குப் பிறகு அப்புறப்படுத்தப்படும் வரை களஞ்சியங்களில் பாதுகாப்பாக வைத்திருத்தல்.<br>IV. களஞ்சிய சாலைபொறுப்பாளரின் கடமைகளில் மற்றும் ஆவணங்களைப் பராமரித்தலில் உதவுதல்.<br>V. பதவி தொடர்பாக நிறுவனத் தலைவரால் ஒதுக்கப்படும் பிற கடமைகள். |
| பொறுத்துனர் (Fitter) | I. 1/64" அளவிடைகளை வாசித்தல் மற்றும் பின்னங்களில் வெளிப்படுத்தப்படும் நீளம், அகலம் போன்றவற்றைப் பதிவு செய்தல் மற்றும் நுண்ணிய அளவீடு களைப் படிப்பது பற்றிய அறிவு இருத்தல்.<br>II. தனது தொழிலுடன் தொடர்புடைய அனைத்து உபகரணங்களின் பெயர்கள், பயன்பாடு மற்றும் பாதுகாத்தல் பற்றிய அறிவு.<br>III. நீராவி மொட்டே டீசல் மற்றும் வில்ரைட் என்ஜின்களில் வெல்டிங் வேலை பற்றிய சிறந்த அறிவு<br>IV. (Chipping and Filing) வெல்டிங் மற்றும் விசேடமான வெல்டிங் முறையைத் திறமையாக செய்யும் திறன்.<br>V. பதவி தொடர்பாக நிறுவனத் தலைவரால் ஒதுக்கப்படும் பிற கடமைகள். |

02. **ஆட்சேர்ப்பு முறை :**

2.1. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர். இந்த நேர்முகப் பரீட்சையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைக் கருத்திற்கொண்டு தகைமைகள் பரீட்சிக்கப்படும்.

| *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புகள்* | *அதிகபட்ச புள்ளிகள்* |
|---|---|
| கல்வித் தகைமைகள் | 25 |
| அனுபவம் | 40 |
| மேலதிக தொழில்சார் தகைமைகள் | 10 |
| பாட விதானத்துக்கு அப்பாற்பட்ட செயற்பாடுகள் | 20 |
| நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை | 05 |
| **மொத்தம்** | 100 |
| | |

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் பெற்றுக்கொண்ட திறமை ஒழுங்கில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரர்களில் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

03. **சம்பள அளவுத்திட்டம்** :

இலக்கம் 10/2025 மற்றும் 2025.03.25 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் PL 02-2025 சம்பளக் குறியீடு இந்த பதவிக்குரியது என்பதுடன் அதற்குரிய சம்பள அளவுத்திட்டம் ரூ. 41,800-10X490-10X540-12X590-12X630- ரூ.65,560.00 ஆகும். இந்த சம்பளம் தங்களுக்கு உரித்தாவது 2027.01.01 ஆம் திகதியிலிருந்து என்பதோடு நியமனம் அமுலுக்கு வரும் திகதியிலிருந்து தங்களுக்கு அந்த சுற்றறிக்கையின் அட்டவணை III இன் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

04. **சேவையில் அமர்த்துவததற்கான நிபநந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள் :**

I. இப்பதவி நிரந்தரமானது, இருப்பினும் இது தாங்களுக்கு மூன்று (03) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும்.
II. இப்பதவி ஓய்வூதியமுடையதாகும். தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் பற்றி அரசாங்கத்தினால் தொடர்ந்தேர்ச்சையாக எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானங்களுக்கு உட்படல்வேண்டும்.
III. உரிய பதவியில் நிரந்தரமாக்கப்படுவதற்கு III ஆந் தரத்தில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு மூன்று (03) வருடங்களுக்குள் ஆடசேர்ப்புத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியெய்திருத்தல் வேண்டும்.
IV. அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 18/2020 மற்றும் அதற்கு இடைநேர் விளைவான சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப உரிய மட்டத்தில் அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும்.
V. அரச சேவையில் நியமனங்களை நிர்வகிக்கும் பொதுவான நிபந்தனைகள், நீர்ப்பாசனத் திணைக்களத்தில் முதன்மை அரை திறமையுள்ள சேவைத் தொகுதிக்கான ஆட்சேர்ப்புத் திட்ட விதிகள் மற்றும் அவ்வப்போது அதில் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள், தாபனக் விதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் பொது சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் ஆகியவற்றின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும்.

05. **வயதெல்லை :**
விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

06. **தேவைப்படும் தகைமைகள் :**

6.1 **கல்வித் தகைமைகள் :**

கல்விப் பொதுத் தராதர (சா.தர)ப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் குறைந்தபட்சம் இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 28/2016 இற்கிணங்க தேசிய தொழிற்கல்வித் தகைமைகளைப் (NVQ 3) பெற்றிருக்க வேண்டும்.

6.2 **தொழில்சார் தகைமைகள் :**

| *பதவிப்பெயர்* | *பதவிக்குரிய தொழில் தேர்ச்சி* |
|---|---|
| செயற்படுத்துனர் (Operator) | I. மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளவாறு தேசிய தொழில்சார் கல்வி தகைமைகளில் (NVQ) குறைந்தபட்சம் இரண்டாம் மட்ட தகைமையைப் பெற்றிருக்க வேண்டும். (இயந்திர உபகரணங்கள் பற்றி)<br>II. மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட வகுப்பு A கனரக வாகன சாரதி அனுமதிப் பத்திரத்தை வைத்திருத்தல்.<br>III. கனரக வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றில் குறைந்தபட்சம் 03 வருட நடைமுறைப் பயிற்சி. |
| ட்ரக்டர் செயற்படுத்துனர் (Tractor Operator) | I. மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட வகுப்பு A கனரக வாகன சாரதி அனுமதிப் பத்திரத்தை வைத்திருத்தல். |

| *பதவிப்பெயர்* | *பதவிக்குரிய தொழில் தேர்ச்சி* |
|---|---|
| மின் வல்லுநர் (Electrician) | I. இயந்திரங்கள் மற்றும் வாகனங்களின் மின் பழுதுபார்ப்பு தொடர்பாக மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் NVQ 2 அல்லது அதற்குமேல் நிலையிலுள்ள மின் பழுதுபார்த்தல் பற்றிய 6 மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட பயிற்சி சான்றிதழை பெற்றிருக்க வேண்டும்.<br>II. மெக்கட்ரோனிக்ஸ் துறையில் 6 மாத பயிற்சிநெறியை பூர்த்தி செய்திருக்க வேண்டும். |
| இயந்திரவியலாளர் (Mechanic) | மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்டுள்ளவாறு தேசிய தொழில்சார் கல்வி தகைமைகளில் (NVQ) குறைந்தபட்சம் இரண்டாம் மட்டத்தில் இயந்திரங்கள் மற்றும் வாகன பழுதுபார்க்கும் துறையில் தகைமையைப் பெற்றிருக்க வேண்டும். |
| வேல்டர் (Welder) | மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்டுள்ளவாறு தேசிய தொழில்சார் கல்வி தகைமைகளில் (NVQ) குறைந்தபட்சம் இரண்டாம் மட்டத்தில் வேல்டிங் (Welding) துறையில் தகைமையைப் பெற்றிருக்க வேண்டும். |
| உலோக வேலையாள் (Tinker) | மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்டுள்ளவாறு தேசிய தொழில்சார் கல்வி தகைமைகளில் (NVQ) குறைந்தபட்சம் இரண்டாம் மட்டத்தில் உலோக வேலை துறையில் தகைமையைப் பெற்றிருக்க வேண்டும். |
| வர்ணம் தீட்டுபவர் (Painter) | மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்டுள்ளவாறு தேசிய தொழில்சார் கல்வி தகைமைகளில் (NVQ) குறைந்தபட்சம் இரண்டாம் மட்டத்தில் வர்ணம் தீட்டுதல் துறையில் தகைமையைப் பெற்றிருக்க வேண்டும். |
| லேத்மன் (Latheman) | மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்டுள்ளவாறு தேசிய தொழில்சார் கல்வி தகைமைகளில் (NVQ) குறைந்தபட்சம் இரண்டாம் மட்டத்தில் லேத் வேகிங் (Lathe working) துறையில் தகைமையைப் பெற்றிருக்க வேண்டும். |
| பொறுத்துனர் (Fitter) | மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளவாறு தேசிய தொழில்சார் கல்வி தகைமைகளில் (NVQ) குறைந்தபட்சம் இரண்டாம் மட்டத்தில் பொறுத்துதல் துறையில் தகைமையைப் பெற்றிருக்க வேண்டும். |
| மெக்கானிஸ்ட் (Machinist) | மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்டுள்ளவாறு தேசிய தொழில்சார் கல்வி தகைமைகளில் (NVQ) குறைந்தபட்சம் இரண்டாம் மட்டத்தில் இரும்பு வெட்டுதல் மற்றும் பதித்தல் துறையில் தகைமை யைப் பெற்றிருக்க வேண்டும். |
| கொல்லர் (Blacksmith) | மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளவாறு தேசிய தொழில்சார் கல்வி தகைமைகளில் (NVQ) குறைந்தபட்சம் இரண்டாம் மட்டத்தில் கொல்லராக தகைமையைப் பெற்றிருக்க வேண்டும். |
| பராமரிப்பு மற்றும் செயற்பாட்டுப் பணியாளர் (Maintenance & Operating Labourer) | செயற்பாடு மற்றும் பராமரிப்புக்காகப் பயன்படுத்தப்படும் சிறிய இயந்திரங்களைப் பயன்படுத்தி, குளக் கரைகள், கால்வாய்கள் மற்றும் நீர்ப்பாசனத்திற்குரிய அமைப்புகளை உரிய தரநிலைகளுக்கு ஏற்ப பராமரித்தல் மற்றும் இயந்திரங்களைப் பராமரித்தல், நீர் வெளியேற்றம் தொடர்பான கட்டுப்பாட்டு கட்டமைப்புகளில் வாயில்களை இயக்குதல் போன்ற பணிகளுக்கு சமமான பணியில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து 6 மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட பயிற்சி சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும். |

| *பதவிப்பெயர்* | *பதவிக்குரிய தொழில் தேர்ச்சி* |
|---|---|
| நீர் பம்பி இயக்குநர் (Pump Operator ) | மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்திலிருந்து நீர் பம்பி இயக்கம் அல்லது மோட்டார் வாகன பழுதுபார்த்தல் குறித்த 03 மாதங்களுக்குக் குறையாத பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருக்க வேண்டும். |
| கொத்தன் (Mason) | மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக் கப்பட்டுள்ளவாறு தேசிய தொழில்சார் கல்வி தகைமைகளில் (NVQ) குறைந்தபட்சம் இரண்டாம் மட்டத்தில் கொத்தன் (Masonry) துறையில் 6 மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட பயிற்சி சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும். |
| தச்சர் (Carpenter) | மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக் கப்பட்டுள்ளவாறு தேசிய தொழில்சார் கல்வி தகைமைகளில் (NVQ) குறைந்தபட்சம் இரண்டாம் மட்டத்தில் தச்சர் (Carpentry) துறையில் 6 மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட பயிற்சி சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும். |
| நீர் குழாய் பொறுத்துனர் (Plumber) | மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக் கப்பட்டுள்ளவாறு தேசிய தொழில்சார் கல்வி தகைமைகளில் (NVQ) குறைந்தபட்சம் இரண்டாம் மட்டத்தில் நீர் குழாய் பொறுத்துதல் துறையில் 6 மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட பயிற்சி சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும். |
| உபகரண பொறுப்பாளர் (Instrument Artificier) | தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் பரீட்சை (NCT) அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும் மற்றும் தொடர்புடைய துறையில் மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தில் குறைந்தது 02 வருட அனுபவத்தைப் பெற்றிருக்க வேண்டும். |
| உபகரணங்கள் பழுதுபார்ப்பவர் (Instrument Repairer) | மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்டுள்ளவாறு தேசிய தொழில்சார் கல்வி தகைமைகளில் (NVQ) குறைந்தபட்சம் இரண்டாம் மட்டத்தில் உபகரணம் பழுதுபார்த்தல் துறையில் 6 மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட பயிற்சி சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும். |
| நீரியல் அளவீட்டு உதவியாளர் (Hydrological Survey Labourer) | அரச அல்லது தனியார் துறையில் அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் நிறுவனத்திட மிருந்து வானிலை கருவிகளை(Meter Reading) (மழை அளவீடுகள் போன்றவை) வாசிப்பவர் அல்லது அளவையியல் தொழிலாளியாக குறைந்தபட்சம் 03 ஆண்டுகள் அனுபவம் பெற்றதற்கான சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும். |
| சுற்றுளா பங்களா பராமரிப்பாளர் (Circuit Banglow Keeper) | ஹோட்டல் பாடசாலையால் நடத்தப்படும் வீட்டு பராமரிப்பு அல்லது சமையல் கலைகளில் 6 மாத பாடநெறியை பூர்த்தி செய்து உரிய சான்றிதழைப் பெற்றிருத்தல். |
| | அல்லது |
| | இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையால் நடத்தப்படும் 6 மாத வீட்டு பராமரிப்பு அல்லது சமையல் பாடநெறியை பூர்த்திசெய்தமைக்கான சான்றிதழ். |
| | அல்லது |
| | மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்டுள்ளவாறு தேசிய தொழில்சார் கல்வி தகைமைகளில் (NVQ) குறைந்தபட்சம் இரண்டாம் மட்டத்தில் வீட்டு பராமரிப்பு அல்லது சமையல் துறையில் 06 மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட பயிற்சி சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும். |
| களஞ்சிய தொழிலாளி (களஞ்சிய உதவியாளர்) | களஞ்சியப் பொருட்கள் கணினிமயமாக்குதல், களஞ்சிய தரவுகளை எளிதாகபெற்றுக்காள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுவதால், மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்திடமிருந்து கணினித் துறையில் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். |
| பொறுத்துனர் (Fitter) | மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளவாறு தேசிய தொழில்சார் கல்வி தகைமைகளில் (NVQ) குறைந்தபட்சம் இரண்டாம் மட்டத்தில் nghWj;Jதல் துறையில் சான்றிதழ் பெற்றிருத்தல். |

6.3 **அனுபவம்** – பதவி தொடர்பாக பெற்றுக்கொள்ளப் பட்ட அனுபவம் விசேட தகைமையாக கருதப்படும்.

6.4 **உடல் மற்றும் உள ரீதியான தகைமைகள்: -**
விண்ணப்பதாரிகள் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் பணிபுரிவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உடல்,உள ஆரோக்கியத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

6.5. **ஏனைய தகைமைகள்:**

I. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.

II. சிறந்த நன்நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

III. விண்ணப்பதாரிகள் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான தகைமைகள் பூர்த்திசெய்துள்ளதாக ஏற்றுக்கொள்வது விண்ணப்பதாரிகள் இவ் அறிவித்தலில் 05 மற்றும் 06 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் 2025 ஒக்டாபர் மாதம் 26 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் சகல விதத்திலும் பூர்த்தி செய்திருந்தால் மட்டுமே ஆகும். தகைமைகளை உறுதிபடுத்த உரிய சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

7. **விண்ணப்பம் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல்**

I. இந்த அறிவிப்பின் இறுதியில் வழங்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின்படி, விண்ணப்ப தாரர் 21X29 செ.மீ (A4) அளவுள்ள தாளின் இருபுறமும் பயன்படுத்தி விண்ணப்பப் படிவத்தைத் தயாரிக்க வேண்டும். இலக்கம் 1 முதல் 3 வரை முதல் பக்கத்திலும், இலக்கம் 4 முதல் 5 வரை இரண்டாவது பக்கத்திலும், இலக்கம் 6 முதல் 8 வரை மூன்றாவது பக்கத்திலும், இலக்கம் 9 நான்காவது பக்கத்திலும் இடம்பெறும் வகையில் விண்ணப்பப் படிவம் தயாரிக்கப்பட வேண்டும்.

II. விண்ணப்பங்கள் நேர்முகப் பரீட்சைக்குத் தோன்றும் மொழியில் மட்டுமே தயாரிக்கப்பட வேண்டும்.

III. ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டால், ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

IV. விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் போது ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் விண்ணப்பம் மற்றும் நேர்முகப் பரீட்சைக் கட்டணமாக ரூ. 500/- செலுத்துவது கட்டாயமாகும். இது நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம், இலங்கை வங்கி,வைத்தியசாலை வீதி, கொழும்பு 01, திப்ரோபேன் கிளை என்ற பெயரில் பராமரிக்கப்படும் கணக்கு இலக்கம் 7042385 இல் வரவு வைக்கப்பட்டு அதன் பற்றுச்சீட்டு விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

V. உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க மற்றும் முறையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் எந்த அறிவிப்பும் இன்றி நிராகரிக்கப்படும்.

VI. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமைப் பற்றி அறிவிக்கப்படமாட்டாது. தபாலில் தொலைந்து போன விண்ணப்பங்கள் தொடர்பான எந்தவொரு முறைப்பாடுகளும் பரிசீலிக்கப்படமாட்டாது.

VII. நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக வழங்கப்படும் கடிதங்கள், விண்ணப்பதாரர் இந்தப் பதவிக்கான தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளதாக கருதப்படமாட்டாது.

VIII. விண்ணப்பத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பத்தை, அரச பாடசாலையின் தலைமை ஆசிரியர்/ஓய்வு பெற்ற அதிகாரி, பிரதேசத்தின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், வழக்கறிஞர், பொது நொத்தாரிசு முப்படைகளின் அதிகாரி, அரச அல்லது மாகாண பொது சேவையில் உள்ள அதிகாரி அல்லது நிரந்தர பதவிநிலை உத்தியோகத்தர் அல்லது ஒரு பௌத்த விகாரையின் தலைமை தேரர் அல்லது தலைமை வணக்கத்திற்குரிய தேரர் அல்லது வேறு மதத்தின் வழிபாட்டுத் தலத்திற்குப் பொறுப்பான ஒருவர்அல்லது மதகுருமார்கள் சங்கத்தில் குறிப்பிடத்தக்க பதவியை வகிக்கும் ஒருவர் ஆகியோரால் உறுதிசெய்யப்பட வேண்டும்.

IX. விண்ணப்பம் அடங்கிய உறையின் இடதுபக்க மேல் மூலையில்,தாங்கள் விண்ணப்பிக்கும் பதவிக்கு ஏற்ப."நீர்ப்பாசனத் திணைக்களத்தின் வெற்றிடமாகவுள்ள ஆரம்ப அரை தேர்ச்சி பெற்ற சேவைத் தொகுதியின் ......................... .........பதவிக்கான திறந்த ஆட்சேர்ப்பு - 2025" என்று தெளிவாகக் குறிப்பிட்டு, 2025 ஒக்டாபர் மாதம் 26 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம், நீர்ப்பாசனத் திணைக்களம், 230, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் மட்டுமே அனுப்ப வேண்டும்.

8. **பொய்யான தகவல்களை சமர்ப்பித்தல் :**

விண்ணப்பத்தினை நிரப்பும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை சமர்ப்பித்தல் வேண்டும். பரீட்சார்த்தியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனு மொரு விடயம் தவறானது அல்லது பொய்யானது என

ஆட்சேர்ப்பதற்கு முன்னர் நிரூபிக்கப்பட்டால் தங்களது பரீட்சார்தத் தன்மையை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பரீட்சார்த்தியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் தவறானது அல்லது பொய்யானது என ஆட்சேர்க்கப்பட்ட பின்னர் நிரூபிக்கப்பட்டால் நியமனம் இரத்துச் செய்யப்பட அல்லது அரச சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்வதற்குரிய நடவடிக்கையும் எடுக்கப்படும்.

9. **நேர்முகப் பரீட்சை நடாத்துதல்**

2025 நவம்பர் மாதத்தில் கொழும்பில் மாத்திரம் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

10. இதில் குறிப்பிடப்படாத எந்தவொரு விடயமாக இருப்பினும் அது தொடர்பாக நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தால் முடிவு செய்யப்படும்.

11. இந்த அறிவித்தலில் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடு காணப்பட்டால், சிங்கள மொழியே செல்லுபடியானதாக கருதப்படும்.

எந்திரி அஜித் குணசேகர,
நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம்.

நீர்ப்பாசனத் திணைக்களம்,
பௌத்தலோக மாவத்தை,
கொழும்பு 07,
2025, செத்தெம்பர் 25.

(அலுவலக உயோகத்திற்கு மாத்திரம்)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஆரம்ப அரைத் தேர்ச்சி பெற்ற சேவைத் தொகுதியின் .................(III பதவிக்காக திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல் - 2025**

**The Application for the Open Basis Recruitment to the Post of ................................................ (III) in the Irrigation Department -2025**

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 1
தமிழ் - 2

1.0 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : ..........................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)
1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் : ..........................................................................
(சிங்களத்தில்/ தமிழில்)
1.3 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் : ..........................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)
1.4 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் : ..........................................................................
(சிங்களத்தில்/ தமிழில்)
1.5 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :
1.6 பெண் ஆண் பற்றி
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.) பெண் 1
ஆண் 2

2.0 2.1 நிரந்தர முகவரி :......................................................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

2.2 நிரந்தர முகவரி :......................................................................................................
(சிங்களத்தில்/ தமிழில்)

2.3 பரீட்சை அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி :
(i) (சிங்களத்தில்/ தமிழில்) : ..........................................................................................................
(ii) (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : .......................................................................................

2.4 தொலைபேசி இலக்கம் : தனிப்பட்ட ......................................................

3.0 3.1 திருமணமானவர்/ திருமணமாகாதவர் பற்றி :

திருமணமாகாதவர் 1
திருமணமானவர் 2 ☐

3.2 பிறந்த திகதி :
உரிய கூட்டினுள் எழுதவும்.

வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3.3 விண்ணப்பம் கோரப்படும் இறுதித்தினத்திற்கு வயது : .......................

வருடம் : ☐☐ மாதம் : ☐☐ நாள் : ☐☐

3.4 நீங்கள் ஒரு இலங்கை பிரசையா, பிறப்பின் மூலமா? பதிவின் மூலமா? : ............................................................

4.0 கல்வித் தகைமைகள் :

4.1 க. பொ. த. (சா. த.) பரீட்சை பற்றிய விபரம்

I. பரீட்சையின் வருடமும் மாதமும் ;........................
II. சுட்டெண் : .........................

| *பாடங்கள்* | *தரம்* | *பாடங்கள்* | *தரம்* |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

4.2 க. பொ. த. (சா. த.) பரீட்சை பற்றிய விபரம்

I. பரீட்சையின் வருடமும் மாதமும் ;........................
II. சுட்டெண் : .........................

| *பாடங்கள்* | *தரம்* | *பாடங்கள்* | *தரம்* |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

4.3 தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம்:

……………………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………

5.0 தாங்கள் ஏதேனும் குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் குற்றத்திற்காக தண்டனைப்பெற்றுள்ளீரா?
(உரிய கூட்டினுள் ( ✓ ) அடையாளமிடுக )

| ஆம் | | | இல்லை | |
|---|---|---|---|---|

அவ்வாறு தண்டனைப்பெற்றிருப்பின் அது என்ன குற்றத்திற்காக எந்த நீதிமன்றத்தினால் என்ன தண்டனைப்பெறப்பட்டது என்ற தகவலைத்தருக ……………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………

6.0 பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு

பற்றுச்சீட்டு இலக்கம் ............................................... திகதி ........................................

| பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும் |
|---|

7.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை:

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் எனது அறிவுக்கெட்டிய வரை சரியானதும் உண்மையானதும் என உறுதி கூறுகிறேன். இதில் ஏதாவது ஒரு பிரிவு பூரணப்படுத்தப்படாமல் அல்லது தவறாக பூரணப்படுத்தி இருப்பின், அதனால் ஏற்படும் இழப்பினை ஏற்றுக் கொள்ளவும் உடன்படுகிறேன். மேலும் இங்கு தரப்பட்டுள்ள அனைத்து தகவல்களும் உண்மையானதெனவும் உறுதி கூறுகிறேன்.

(ஆ) நேர்முகப் பரீட்சை நடத்துவது தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்குக் கட்டுப்படவும், நேர்காணலுக்கு முன்னரோ அல்லது பின்னரோ, இந்த நிபந்தனைகளின் கீழ் நான் தகுதியற்றவன் எனக் கண்டறியப்பட்டால், எனது விண்ணப்பத்தை இரத்து செய்ய எடுக்கப்பட்ட எந்தவொரு முடிவையும் ஏற்றுக்கொள்வதற்கும் நான் ஒப்புக்கொள்கிறேன்.

(இ) என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என நியமனம் செய்யப்படுவதற்கு முன்னர் நிரூபிக்கப்பட்டால், தகைமையற்றவர் எனவும், நியமிக்கப்பட்ட பின்னர் எனின், பதவியிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நன்கறிவேன்

(ஈ) இங்கு வழங்கப்பட்ட எந்த தகவலையும் நான் பின்னர் மாற்ற மாட்டேன்.

திகதி : …………………….. ……………………………………
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

8.0 **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்** :

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/ செல்வி ……………………………………………………………………… என்பவரைத் தனிப்பட்ட ரீதியில் அறிவேன் எனவும் அவர் ....................................................... ஆந் திகதி எனது முன்னிலயில் தனது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதியளிக்கின்றேன்.

......................................................
கையொபபத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின்
கையொப்பம் மற்றும் அலுவலக முத்திரை

திகதி : ..........................
உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் பெயர் : .............................................
பதவி : ..........................................................
முகவரி : ...........................................................

9.0 திணைக்கள/ நிறுவனத் தலைவரின் சான்றிதழ்
(தற்போது சேவையிலுள்ளவர்களுக்கு மட்டும்)

திரு./ திருமதி/ செல்வி …………………………………… என்பவர் ................................................ சேவையிலுள்ள பதவியை வகிக்கின்றார் எனவும் அவர் வழங்கியுள்ள தகவல்கள் சரியானது எனவும் உறுதி கூறுகின்றேன். இப்பதவிக்காக இவர் தெரிவு செய்யப்பட்டால் ..................... சேவையிலிருந்து அவரை விடுவிக்க முடியும்/ முடியாது எனவும் மேலும் உறுதியளிக்கின்றேன்.

......................................................
திணைக்களத்தலைவரின் கையொப்பம் மற்றும்
அலுவலக முத்திரை

திகதி : ..........................

09-296

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

### கள/ அலுவலக அடிப்படையிலான உத்தியோகத்தர் தொகுதி – 02 இன் (MN 05- 2006 A) சேவை வகையைச் சேர்ந்த மனநல சமூக சேவை உத்தியோகத்தர் – தரம் II பதவிக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்த்தல் – 2025

1.0. சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு வெளிக்கள/அலுவலக அடிப்படையிலான உத்தியோகத்தர் தொகுதி – 02 (MN 05- 2006 A) - சேவை வகையின் மனநல சமூக சேவை உத்தியோகத்தர் பதவியின் தரம் II இல் 07 பதவிகளுக்கு மட்டுப்படுத்தப் பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதன் பொருட்டு கீழ் குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

2.0. **ஆட்சேர்ப்பு முறை :**

அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்களில் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளரினால் அல்லது அவரால் அங்கீகரிக்கப்படுகின்ற நிறுவனமொன்றின் மூலம் நடாத்தப்படுகின்ற எழுத்துப் பரீட்சை ஒன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில், அதிகபட்ச புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் பரீட்சார்த்திகளின் உடல் தகுதி மற்றும் தகைமைகளைப் பரீட்சிக்கும் நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கு உட்படுத்தியதன் பின்னர் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

3.0. நிலவுகின்ற வெற்றிடங்களின் கீழ் நியமிக்கப்படுகின்ற எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்கு வரும் திகதி என்பன சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சுச் செயலாளரினால் தீர்மானிக்கப்படும்.. எவையேனும் சில வெற்றிடங்களை அல்லது சகல வெற்றிடங்களையும் முழுமையாக நிரப்புவதற்கும்/ நிரப்பாமல் இருப்பதற்கும் செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

4.0. **மொழி மூலம் :**

இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடைபெறும். பரீட்சார்த்திகள் தாங்கள் விரும்பும் ஏதேனுமொரு மொழியில் இப்பரீட் சைக்குத் தோற்ற முடியும். அவ்வாறு விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

5.0. **ஆட்சேர்ப்பிற்கான அடிப்படைத் தகைமைகள் :**

5.1 **கல்வித் தகைமைகள் :**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றிலிருந்து சமூகவியல்/ சமூக மானிடவியல்/ உளவியல் அல்லது சமூக பணிகள் தொடர்பிலான விசேட பட்டமொன்றினைப் பெற்றிருத்தல்.

5.2 **அனுபவம் :**

சேவையில் நிரந்தரப்படுத்தப்பட்டுள்ள, அண்மித்த ஐந்து (05) ஆண்டுகளில் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூரணப்படுத்தியுள்ள மற்றும் தொடர்புடைய உத்தியோகத்தர் சேவை வகையில் ஐந்து (05) வருட தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்யும் MN- 04- 2006A சம்பளக் குறியீட்டின் கீழ் சம்பளம் பெறும் அரசாங்க சேவை உத்தியோகத்தர் ஆக இருத்தல்.

5.3 **உடல் தகுதிகள்:**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை ஆற்றுவதற்கும் போதுமான உடல் ரீதியான மற்றும் உள ரீதியான தகுதி உடையவராக இருத்தல் வேண்டும்.

5.4 **ஏனைய தகைமைகள் :**

I. விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாதல் வேண்டும்.
II. விண்ணப்பதாரர் சிறந்த ஒழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.
III. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதிக்குள் தேவைப் படும் அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்

**குறிப்பு :**

1. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் தினத் திற்கு முந்திய ஐந்து வருட காலப் பகுதியினுள் திருப்திகரமான சேவைக் காலம் ஒன்றினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். இங்கு திருப்திகரமான சேவை என்பது, பின்வரும் விடயங்களைக் குறிக்கிறது.
   i. விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் இறுதித் தினத்திற்கு முந்திய ஐந்து வருட காலப் பகுதியினுள் சகல சம்பள உயர்வுகளையும் பெற் றிருத்தல்
   ii. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படும் இறுதித் தினத்திற்கு முந்திய ஐந்து வருட காலப் பகுதியினுள் எந்தவொரு ஒழுக்காற்று தண்டனைக்கும் ஆளாகியிருக்கக் கூடாது.
2. நியமனம் பெறுவதற்கு விண்ணப்பதாரர் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவரை விடுவிப் பதற்காக திணைக்களத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றிருத்தல் வேண்டும்
3. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித் துள்ளனர் என்ற எடுகோளின் அடிப்படையில் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப் பதாரர்கள் போட்டிப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் அது பற்றி விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அறியத்தரப்படும்.

6.0. **வயதெல்லை:**

ஏற்புடையதன்று.

7.0 **சம்பள அளவு :**

2025.03.25 ஆம் திகதிய 10/2025 ஆம் இலக்கம் கொண்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் உப அட்டவணை 1 இன் படி இப் பதவிக்குரிய மாதாந்தச் சம்பள அளவு ரூ. 58, 660– 10 x1190– 11 x1360x 15 x1670 – ரூ. 110,570 (MN– 05-2026(ஏ)) ஆகும்.

8.0 **எழுத்துப் பரீட்சை :**

| *வினாப் பத்திரத்தின் பெயர்* | *பாடத் திட்டம்* | *நேரம்* | *உச்ச புள்ளிகளின் அளவு* | *தேர்ச்சிப் புள்ளிகளின் அளவு* |
|---|---|---|---|---|
| 1. விடயம் பற்றிய அறிவு | இந்த வினாத்தாள், ஒவ்வொரு பதவிக்கும் பொருத்தமான துறையின் பொதுவான விடயங்கள் மற்றும் பதவி க்கு பொருத்தமான நடைமுறைப் பயன்பாடுகளை மதிப்பிடும் திறனை சோதிக்கும் வகையில் வடிவமைக்கப்படும். | 02 மணித்தியாலம் | 100 | 40% |
| 2. நுண்ணறிவு | வார்த்தைகள், எண்கள் மற்றும் உருவ அமைப்புக் களாக முன் வைக்கப்படும் சிக்கல்கள் தொடர்பில் பரீட்சார்த்திகள் எடுக்கும் முடிவுகள் மற்றும் வழங்கின்ற பதில்களின் அடிப்படையில் ஒரு பரீட்சார்த்தியின் பொருளா தாரப் புரிதல் குறித்த சிக்கல்கள் பற்றிய கிரகிப்புத்திறன், கணிப்பீடு மற்றும் நேரம் மற்றும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப அவற்றுக்கிடையேயான தொடர் புகளைப் புரிந்து கொள்வதில் பரீட்சார்த்தி கொண்டுள்ள திறமையினை அளவிடுதல் இதன் மூலம் எதிர் பார்க்கப்படுகின்றது. | 01 மணித்தியாலம் | 100 | 40% |

9.0 **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

I. ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்ற இணங்குதல் வேண்டும்.

II. இந் நியமனம் நிரந்தரமானதும் ஓய்வூதியம் பெறக்கூடியதுமாகும். தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசினால் எதிர்காலங்களில் மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியிலான தீர்மானங்களுக்குத் தாங்கள் கீழ்ப்படிதல் வேண்டும். மேலும், தாங்கள் விதவைகள் மற்றும் அனாதைகள் / தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அத்துடன் அரசாங்கத்தினால் அவ்வப்போது பரிந்துரைக்கப்படுவதன் பிரகாரம் தங்களினால் அதற்குரிய பங்களிப்புத் தொகைகளை தாங்கள் செலுத்துதல் வேண்டும்

III. பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 18/2020 (II) இன் படி அரசகரும மொழியில் தொடர்புடைய தேர்ச்சியைப் பெற்றிருக்க வேண்டும்.

IV. இந்த நியமனம் 01 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது.

V. இந் நியமனம் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறைக் கோவை ஒழுங்கு விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும், அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கும், MN-05 - 2006 ஏ ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கும், திணைக்கள ரீதியிலான ஏனைய கட்டளைகளுக்கும் உட்பட்டதாகும்.

10. **விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் :**

I. சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பப் படிவத்தின் மாதிரியொன்று இவ் அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் அவர்களது விண்ணப்பங்களை A4 அளவு தாளில் தயாரித்து, முதல் பக்கத்தில் இலக்கம் 01 முதல் 06 வரையிலும் 02 ஆம் பக்கத்தில் இலக்கம் 07 முதல் 09 வரையிலும் மீதமுள்ள தகவல்களை பின்வரும் பக்கங்களிலும் உள்ளடங்கும் வண்ணம் தயாரித்து அதனைத் தங்கள் சொந்த கையெழுத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும்

II. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் அச்சிடப்பட்ட மற்றும் முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை நிறுவனத் தலைவரிடம் ஒப்படைத்தல் வேண்டும், அவர் ஒவ்வொரு விண்ணப்பதாரரும் சமர்ப்பிக்கும் தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என்று தனிப்பட்ட முறையில் சான்றளித்த பின்னர் அனைத்து விண்ணப்பங்களையும் பணிப்பாளர் (நிர்வாகம்) 07, சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு, இல. 385, வண.பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10. எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 2025.10.24 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும்.

III. விண்ணப்பம் அடங்கிய உறையின் இடது பக்க மேல் மூலையில் "**மனநல சமூக சேவை உத்தியோகத்தர் பதவிக்கு (மட்டுப்படுத்தப்பட்ட) ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பம்**" எனக் குறிப்பிடுதல் வேண்டும் .

IV. இது தொடர்பிலான மேலும் கடிதப் பரிமாற்ற நடவடிக்கைகள் மின்னஞ்சல் மூலமாகவும் மேற்கொள்ளப்படலாம். எனவே, செல்லுபடியாகும் மின்னஞ்சல் முகவரி ஒன்றினை வழங்குவது கட்டாயமாகும். மேலும் நீங்கள் அது தொடர்பில் அவதானத்துடன் இருத்தல் வேண்டும்.

V. இந்த பரீட்சைக் கட்டணம் ரூ. 1000.00 ஆகும். எந்தவொரு காரணத்தினைக் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது. இலங்கை வங்கியின் தப்ரோபேன் கிளையில் "சுகாதார செயலாளர்" எனும் பெயரில் உள்ள கணக்கிலக்கம் 7041318 கணக்கிற்கு வரவு வைக்கப்படும் வண்ணம் இத் தொகையினை இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் செழுத்திப் பெற்றுக் கொள்ளப்படும் பற்றுச்சீட்டினை மாதிரி விண்ணப்பப்படிவத்தில் உள்ள கூண்டினுள் கழறாத வண்ணம் ஒட்டுதல் வேண்டும் (காசுக் கட்டளைகள் மற்றும் முத்திரைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது).

11. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம் :**

விண்ணப்பதாரர்கள் பரீட்சை நிலையத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக் கொள்ளப்படும்.

I. தேசிய அடையாள அட்டை ;

II. செல்லுபடியான கடவுச் சீட்டு ;

III. செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம்

பரீட்சார்த்திகள் அவர்களது ஆளடையாளத்தை சரி பார்க்கும் வகையில் அவர்களது முகம் மற்றும் காதுகளை மறைக்காதவாறு பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு மறுப்பு தெரிவிக்கும் விண்ணப் பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தது தொடக்கம் பரீட்சை முடிந்து அங்கிருந்து வெளியேறும் வரை மேற்பார்வை யாளர்கள் பரீட்சார்த்தியை அடையாளம் காணும் வகையில் முகத்தையும் காதுகளையும் மூடாது பரீட்சை மண்டபத்தினுள் இருத்தல் வேண்டும்.

12.0 **போலியான தகவல்களை வழங்குதல் :**

தங்களால் அனுப்பப்பட்ட விண்ணப்பத்தில் குறிப்பிடப் படுகின்ற ஏதேனுமோர் தகவல் பொய்யானது அல்லது தவறானது என ஆட்சேர்ப்புக்கு முன்னர் கண்டறியப்பட்டால் தங்களது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். அவ்வாறான பொய்யான அல்லது தவறான தகவல் ஆட்சேர்ப்புக்கு பின்னர் கண்டறியப்பட்டால் சம்பந்தப்பட்ட நடைமுறைகளுக்கு உட்பட்டு சேவையிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கை கள் மேற்கொள்ளப்படும்.

13.0 இவ் அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில வாசகங்களிடையே ஏதேனும் வேறுபாடுகள் காணப் படின், அவ்விடத்தே சிங்கள மொழியிலான வாசகம் செல்லுபடியாதல் வேண்டும்.

விஷேட வைத்தியர் அனில் ஜாசிங்ஹ,
செயலாளர்,
சுகாதார மற்றும் வெகுசன ஊடக
அமைச்சு.

சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,
இல. 385, வண பத்தேகம விமலவன்ஷ தேரர் மாவத்தை,
கொழும்பு 10,
2025.09.12.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின்**
**மனநல சமூக சேவை உத்தியோகத்தர் – தரம் II தவிக்கு**
**மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்த்தல் – 2025**

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : ☐ வதிவிட மாவட்டம் : ☐
(சிங்களம் – S / தமிழ்- T / ஆங்கிலம் - E)

01. 1.1 விண்ணப்பதாரரின் முதலெழுத்துகளுடனான பெயர்: Mr/Mrs/Miss. ……………………………………
……………………………………………………………………………………………
(ஆங்கிலக் கெப்பிட்டல் எழுத்தில்) உதா:- Mr/~~Mrs/Miss.~~ SILVA A. B.
1.2 முழுப் பெயர் :……………………………………………………………………………
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)……………………………………………………………
1.3 முழுப் பெயர் :……………………………………………………………………………
(சிங்களத்தில்/தமிழில்) ……………………………………………………………………

02. 2.1 முகவரி (தனிப்பட்ட) : ………………………………………………………………………
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)……………………………………………………………
2.2 முகவரி (தனிப்பட்ட) : ………………………………………………………………………
(சிங்களத்தில்/தமிழில்) ……………………………………………………………………
2.3 முகவரி (அலுவலக) : ………………………………………………………………………
(ஆங்கில் கெப்பிட்டல் எழுத்தில்)……………………………………………………………
2.4 முகவரி (அலுவலக) :………………………………………………………………………
(சிங்களத்தில்/தமிழில் ) ……………………………………………………………………
(முகவரியில் மாற்றங்கள் ஏற்படின் அதனை உடனடியாக அறிவித்தல் வேண்டும்)
2.5 தொலைபேசி இலக்கம் (தனிப்பட்ட) :……………………………………………………
2.6 தொலைபேசி இலக்கம் (அலுவலக) :……………………………………………………
2.7 மின்னஞ்சல் முகவரி (email address): ……………………………………………………

03. 3.1 பிறந்த திகதி: ஆண்டு: ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி: ☐☐

3.2 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் வயது :

வருடங்கள்: ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள்: ☐☐

04. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :……………………………………………………

05. பால் (ஆண் /பெண்) : ……………………………………………………………………

06. தகைமைகள் :

6.1 உரிய கல்வித் தகைமைகள் :
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
6.2 தொழில்சார் தகைமைகள் :
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

07. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு விபரங்கள் :

7.1 பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :……………………………………………
7.2 பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :……………………………………………

7.3 செலுத்திய தொகை :......................................................................................................................................

| |
|---|
| இலங்கை வங்கிக் கிளையொன்றில் ரூ. 1000.00 தொகையினைச் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டினை கழராத வண்ணம் இங்கு ஒட்டவும். |

08. விண்ணப்பதாரரின் உறுதியுரை:

இந்த விண்ணப்பத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என கௌரவமாகத் தெரிவித்துக் கொள்கின்றேன். இதில் அடங்கியுள்ள ஏதேனுமோர் விபரம் பொய்யானது அல்லது போலியானது என கண்டுபிடிக்கப்படின், அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டது தெரிவு செய்யப்பட முன்னராயின் அவ்விண்ணப்பம் இரத்து செய்யப்படும் எனவும், தெரிவு செய்யப்பட்டதன் பின்னராயின் எந்தவித நட்டஈடுமின்றி நான் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதனையும் ஏற்றுக்கொள்கின்றேன்.

திகதி :................................ ......................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

09. திணைக்கள/ நிறுவனத் தலைவரினால் பூரணப்படுத்தப் பட வேண்டிய விபரங்கள் :

I. அலுவலரின் பெயர் திரு/ திருமதி/ செல்வி........................................................................................................
II. அலுவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கம் ..........................................................................................
III. பரீட்சைக்கு விண்ணக்கும்போது வகித்த பதவி ..................................................................................................
IV. விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் இறுதித் திகதிக்குள் 05 வருட தொடர்ச்சியான சேவைக் காலம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா?..................................................................................................
V. பதவியை உறுதிப்படுத்தும், உறுதிப்படுத்தல் கடிதம் வழங்கப்பட்டுள்ளதா? ஆம் எனில் கடிதத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியை இணைக்கவும் ..................................................................
VI. விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் இறுதித் திகதிக்கு முந்தைய 05 வருட காலத்தில் சகல சம்பள ஆண்டேற்றங்களும் பெறப்பட்டுள்ளதா? ....................... ஆம் எனில், சம்பள உயர்வுகளின் தன்மை ............................................................. .............................
VII. விண்ணப்பங்களைக் கையேற்கும் இறுதித் திகதிக்கு முந்தைய 05 வருட காலத்தில் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளாரா? ....................................... (ஆம் எனில் விபரத்தை வழங்கவும்)
VIII. தற்போது ஒழுக்காற்று விசாரணைகள் நடைபெறுகின்றதா? .......................................... (ஆம் எனில் விபரத்தை வழங்கவும்) ................................................
IX. நீதிமன்றத்தின் முன் அலுவலரின் ஏதேனுமோர் குற்றச்சாட்டுக்காக குற்றவாளி ஆக்கப்பட்டுள்ளாரா? ....................... .................. (ஆம் எனில் விபரத்தை வழங்கவும்) ................................................

10. திணைக்கள/ நிறுவனத் தலைவரின் பரிந்துரை

இவ் விண்ணப்பதாரரான திரு./ திருமதி/ செல்வி. ................................................................ இத் திணைக்களத்தில்/நிறுவனத்தில் ................................. ஆந் திகதி முதல் சேவையாற்றுகின்றார். அவர் நிரந்தர ஓய்வூதியம் பெறும் பதவியை வகிக்கிறார். கடந்த ............... ஆண்டுகளில் அவர் மேற்கூறிய அனைத்து சம்பள ஆண்டேற்றங்களையும் அவர் பெற்றுள்ளார் என்றும் அவர் மீது எந்த ஒழுக்காற்று நடவடிக்கையும் (எச்சரிக்கைகள் தவிர) மேற்கொள்ளப்படவில்லை எனவும் மேற்கூறிய அனைத்து தகவல்களும் இந்த அலுவலகத்தில் உள்ள பதிவுகளுடன் சரிபார்க்கப்பட்டு அவை சரியானவை எனவும் அவர் இந்தப் பதவிக்காகத் தெரிவு செய்யப்படின் தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிக்கப்படுவார்/ விடுவிக்கப்பட மாட்டார் எனவும், ......................... ஆந் திகதி அவர் எனது முன்னிலையில் ஒப்பமிட்டார் என்பதனையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

..........................................................................
திணைக்கள/ நிறுவனத் தலைவரின் ஒப்பம்.

பெயர்; :- ......................................................................................
பதவிப் பெயர்; :- ......................................................................................
திகதி :- ......................................................................................
திணைக்களம்/ நிறுவனம்; :-.................................................................................
(உத்தியோகபூர்வ இலச்சினை மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்).

09-240/1

**சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு**

களஃ அலுவலக உத்தியோகத்தர் தொகுதி – 02 இன் (MN 05- 2006 A) சேவை வகையைச் சேர்ந்த மனநல சமூக சேவை உத்தியோகத்தர் – தரம் II பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல் – 2025

1.0 சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு வெளிக்கள/ அலுவலக அடிப்படை யிலான உத்தியோகத்தர் தொகுதி – 02 (MN 05- 2006 A) சேவை வகையின் மனநல சமூக சேவை உத்தியோகத்தர் பதவியின் தரம் II இன் 26 பதவிகளுக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதன் பொருட்டு கீழ் குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2.0. **ஆட்சேர்ப்பு முறை:**

அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்களில் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளரினால் அல்லது அவரால் அங்கீகரிக்கப்படுகின்ற நிறுவனமொன்றின் மூலம் நடாத்தப்படுகின்ற எழுத்துப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில், அதிகபட்ச புள்ளி களைப் பெற்றுக் கொள்ளும் பரீட்சார்த்திகளின் உடல் தகுதி மற்றும் தகைமைகளைப் பரீட்சிக்கும் நேர்முகத் தேர்வொன்றிற்கு உட்படுத்தியதன் பின்னர் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

3.0 நிலவுகின்ற வெற்றிடங்களின் கீழ் நியமிக்கப்படுகின்ற எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்கு வரும் திகதி என்பன சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சுச் செயலாளரினால் தீர்மானிக்கப்படும். எவையேனும் சில வெற்றிடங்களை அல்லது சகல வெற்றிடங்களையும் முழுமையாக நிரப்புவதற்கும்/ நிரப்பாமல் இருப்பதற்கும் செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

4.0 **மொழி மூலம் :**

இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடைபெறும். பரீட்சார்த்திகள் தாங்கள் விரும்பும் ஏதேனுமொரு மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும். அவ்வாறு விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

5.0 இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்காக விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

5.1 **அடிப்படைத் தகைமைகள் :**

I. விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாதல் வேண்டும்.

II. விண்ணப்பதாரர் சிறந்த ஒழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.

III. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் தேதிக்குள் தேவைப்படும் அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

5.2 **கல்வித் தகைமைகள் :**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றிலிருந்து சமூகவியல்/ சமூக மானிடவியல்/ உளவியல் அல்லது சமூக பணிகள் தொடர்பிலான விசேட பட்டமொன்றினைப் பெற்றிருத்தல்.

5.3 **உடல் தகுதிகள்:**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை ஆற்றுவதற்கும் போதுமான உடல் ரீதியான மற்றும் உள ரீதியான தகுதி உடையவராக இருத்தல் வேண்டும்.

6.0. **வயதெல்லை:**

விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியில் உள்ளவாறு வயது 21 வருடங்களுக்கு குறையாமலும், 35 வருடங்களுக்கு மேற்படாதவராவும் இருத்தல் வேண்டும்.

7.0 **சம்பள அளவு:**

2025.03.25 ஆம் திகதிய 10/2025 ஆம் இலக்கம் கொண்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் உப அட்டவணை 1 இன் படி இப் பதவிக்குரிய மாதாந்தச் சம்பள அளவு ரூ. 58, 660– 10 x1190– 11 x1360x 15 x1670–ரூ. 110,570 (MN– 05-2025(ஏ)) ஆகும்.

8.0 **எழுத்துப் பரீட்சை :**

| *வினாப் பத்திரத்தின் பெயர்* | *பாடத்திட்டம்* | *நேரம்* | *உச்ச புள்ளி களின் அளவு* | *தேர்ச்சிப் புள்ளிகளின் அளவு* |
|---|---|---|---|---|
| 1. விடயம் பற்றிய அறிவு | இந்த வினாத்தாள், ஒவ்வொரு பதவிக்கும் பொருத்தமான துறையின் பொதுவான விடயங்கள் மற்றும் பதவிக்கு பொருத்தமான நடைமுறைப் பயன்பாடுகளை மதிப்பிடும் திறனை சோதிக்கும் வகையில் வடிவமைக்கப் படும். | 02 மணித்தி யாலம் | 100 | 40% |
| 2. நுண்ணறிவு | வார்த்தைகள், எண்கள் மற்றும் உருவ அமைப்புக்களாக முன் வைக்கப்படும் சிக்கல்கள் தொடர்பில் பரீட்சார்த்தி கள் எடுக்கும் முடிவுகள் மற்றும் வழங்கு கின்ற பதில்களின் அடிப்படையில் ஒரு பரீட்சார்த்தியின் பொருளாதாரப் புரிதல் குறித்த சிக்கல்கள் பற்றிய கிரகிப்புத்திறன், கணிப்பீடு மற்றும் நேரம் மற்றும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப அவற்றுக் கிடையேயான தொடர்புகளைப் புரிந்து கொள்வதில் பரீட்சார்த்தி கொண்டுள்ள திறமையினை அளவிடுதல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. | 01 மணித்தி யாலம் | 100 | 40% |

9.0 **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

I. ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்ற இணங்குதல் வேண்டும்.

II. இந் நியமனம் நிரந்தரமானதும் ஓய்வூதியம் பெறக்கூடியதுமாகும். தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலங்களில் மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியிலான தீர்மானங்களுக்குத் தாங்கள் கீழ்ப்படிதல் வேண்டும். மேலும், தாங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு/ தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப்போது பரிந்துரைக்கப்படுவதன் பிரகாரம் அதற்குரிய பங்களிப்புகளை தாங்கள் செலுத்துதல் வேண்டும்.

III. பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 18/2020 (II) இன் படி அரச கரும மொழி பற்றிய குறித்த தேர்ச்சியினை பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

IV. இந்த நியமனம் 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது.

V. இந் நியமனம் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறைக் கோவை ஒழுங்கு விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும், அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கும், MN-05 -2006 ஏ ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கும், திணைக்கள ரீதியிலான ஏனைய கட்டளைகளுக்கும் உட்பட்டதாகும்.

10. **விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் :**

I. சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பப் படிவத்தின் மாதிரியொன்று இவ் அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் அவர் களது விண்ணப்பங்களை A4 அளவு தாளில் தயாரித்து, முதல் பக்கத்தில் இலக்கம் 01 முதல் 06 வரையிலும் 02 ஆம் பக்கத்தில் இலக்கம் 07 முதல் 09 வரையிலும் மீதமுள்ள தகவல்களை பின்வரும் பக்கங்களிலும் உள்ளடங்கும் வண்ணம் தயாரித்து, அதனைத் தங்கள் சொந்த கையெழுத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும்.

II. விண்ணப்பங்களைக் கோரும் இறுதித் திகதி 2025.10.24 ஆகும். விண்ணப்பங்களை 2025.10.24 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் "பணிப்பாளர்

(நிர்வாகம்) 07, சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு, இல. 385, வண.பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10" என்ற முகவரிக்கு கிடைக்கும் வண்ணம் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அந்த திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

III. விண்ணப்பம் அடங்கிய உறையின் இடது பக்க மேல் மூலையில் "மனநல சமூக சேவை உத்தியோகத்தர் பதவிக்கு (திறந்த) ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

IV. இது தொடர்பிலான மேலும் கடிதப் பரிமாற்ற நடவடிக்கைகள் மின்னஞ்சல் மூலமாகவும் மேற்கொள்ளப்படலாம். எனவே, செல்லுபடியாகும் மின்னஞ்சல் முகவரி ஒன்றினை வழங்குவது கட்டாயமாகும். மேலும் நீங்கள் அது தொடர்பில் அவதானத்துடன் இருத்தல் வேண்டும்.

V. இந்த பரீட்சைக் கட்டணம் ரூ. 1000.00 ஆகும். எந்தவொரு காரணத்தினைக் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது. இலங்கை வங்கியின் தப்ரோபேன் கிளையில் "சுகாதார செயலாளர்" எனும் பெயரில் உள்ள கணக்கிலக்கம் 7041318 கணக்கிற்கு வரவு வைக்கப்படும் வண்ணம் இத் தொகையினை இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் செலுத்திப் பெற்றுக் கொள்ளப்படும் பற்றுச்சீட்டினை மாதிரி விண்ணப்பப்படிவத்தில் உள்ள கூண்டினுள் கழறாத வண்ணம் ஒட்டுதல் வேண்டும் (காசுக் கட்டளைகள் மற்றும் முத்திரைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது).

VI. விண்ணப்பத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பத்தினை அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர்/ சமாதான நீதவான்/ சத்தியப்பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணி/பிரசித்த நொத்தாரிசு/ ஆணை பெற்ற முப்படை உத்தியோகத்தர்/ பொலிஸ் சேவையில் வர்த்தமானிப்படுத்தப்பட்ட பதவியொன்றினை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது ரூ. 273,060.00.00 இலும் கூடிய திரட்டிய வருடாந்த சம்பளமொன்றினைப் பெறும் நிரந்தர அரச உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப் படுதல் வேண்டும்.

VII. தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள் தங்களது விண்ணப்பங்களை தாம் பணியாற்றும் திணைக்களத் தலைவர் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

VIII. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்தவர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர் என்ற அடிப்படையில், சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்கள் போட்டிப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன், அதுபற்றி விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அறிவிக்கப்படும்.

11. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம் :**

விண்ணப்பதாரர்கள் பரீட்சை நிலையத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக் கொள்ளப்படும் :

I. தேசிய ஆளடையாள அட்டை ;
II. செல்லுபடியான கடவுச் சீட்டு ;
III. செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம்.

பரீட்சார்த்திகள் அவர்களது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதன் பொருட்டு அவர்களது முகம் மற்றும் காதுகளை மறைக்காதவாறு பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு மறுப்பு தெரிவிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தது தொடக்கம் பரீட்சை முடிந்து அங்கிருந்து வெளியேறும் வரை மேற்பார்வையாளர்கள் பரீட்சார்த்தியை ஆளடையாளம் காணும் வகையில் முகத்தையும் காதுகளையும் மூடாது பரீட்சை மண்டபத்தினுள் இருத்தல் வேண்டும்.

12.0 **போலியான தகவல்களை வழங்குதல் :**

தங்களால் அனுப்பப்பட்ட விண்ணப்பத்தில் குறிப்பிடப்படுகின்ற ஏதேனுமோர் தகவல் பொய்யானது அல்லது தவறானது என ஆட்சேர்ப்புக்கு முன்னர் கண்டறியப்பட்டால் தங்களது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். அவ்வாறான பொய்யான அல்லது தவறான தகவல் ஆட்சேர்ப்புக்கு பின்னர் கண்டறியப்பட்டால் சம்பந்தப்பட்ட நடைமுறைகளுக்கு உட்பட்டு சேவையிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இவ் அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில வாசகங்களிடையே ஏதேனும் வேறுபாடுகள் காணப்படின், அவ்விடத்தே சிங்கள மொழியிலான வாசகம் செல்லுபடியாதல் வேண்டும்.

கலாநிதி அனில் ஜாசிங்ஹ,
செயலாளர்,
சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு.

சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,
இல. 385, வண. பத்தேகம விமலவன்ஷ தேரர் மாவத்தை,
கொழும்பு 10,
2025.09.13.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் மனநல சமூக சேவை உத்தியோகத்தர் – தரம் II பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல் - 2025**

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : (சிங்களம் – S / தமிழ்- T / ஆங்கிலம் - E) ☐ வதிவிட மாவட்டம் : ☐

01. 1.1 விண்ணப்பதாரரின் முதலெழுத்துகளுடனான பெயர் : Mr./Mrs/Miss. ...........................................................
..........................................................................................................................................
(ஆங்கிலக் கெப்பிட்டல் எழுத்தில்) உதா:- Mr/~~Mrs/Miss.~~ SILVA A. B.
1.2 முழுப் பெயர் :.......................................................................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)..................................................................................................
1.3 முழுப் பெயர் :.......................................................................................................................
(சிங்களத்தில்/தமிழில்) ...............................................................................................................

02. 2.1 முகவரி (தனிப்பட்ட) : ...........................................................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)..................................................................................................
2.2 முகவரி (தனிப்பட்ட) : ...........................................................................................................
(சிங்களத்தில்/தமிழில்) ...............................................................................................................
2.3 முகவரி (அலுவலக) : ...........................................................................................................
(ஆங்கில் கெப்பிட்டல் எழுத்தில்)..................................................................................................
2.4 முகவரி (அலுவலக) :...........................................................................................................
(சிங்களத்தில்/தமிழில் ) ...............................................................................................................
(முகவரியில் மாற்றங்கள் ஏற்படின் அதனை உடனடியாக அறிவித்தல் வேண்டும்)
2.5 தொலைபேசி இலக்கம் (தனிப்பட்ட) :.........................................................................................
2.6 தொலைபேசி இலக்கம் (அலுவலக) :.........................................................................................
2.7 மின்னஞ்சல் முகவரி (email address): .........................................................................................

03. 3.1 பிறந்த திகதி: வருடம்: ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி: ☐☐

3.2 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் வயது :

வருடங்கள்: ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள்: ☐☐

04. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :..........................................................................................

05. பால் (ஆண் /பெண்) : ....................................................................................................................

06. தகைமைகள் :

6.1 உரிய கல்வித் தகைமைகள் :
..........................................................................................................................................
..........................................................................................................................................
6.2 தொழில்சார் தகைமைகள் :
..........................................................................................................................................
..........................................................................................................................................

07. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு விபரங்கள் :

7.1 பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :..........................................................................

7.2 பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :.......................................................................................................
7.3 செலுத்திய தொகை :......................................................................................................................................

| |
|---|
| இலங்கை வங்கிக் கிளையொன்றில் ரூ. 1000.00 தொகையினைச் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டினை கழராத வண்ணம் இங்கு ஒட்டவும். |

08. விண்ணப்பதாரரின் உறுதியுரை:

இந்த விண்ணபத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என கௌரவமாகத் தெரிவித்துக் கொள்கின்றேன். இதில் அடங்கியுள்ள ஏதேனுமோர் விபரம் பொய்யானது அல்லது போலியானது என கண்டுபிடிக்கப்படின், அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டது தெரிவு செய்யப்பட முன்னராயின் அவ்விண்ணப்பம் இரத்து செய்யப்படும் எனவும், தெரிவு செய்யப்பட்டதன் பின்னராயின் எந்தவித நட்டஈடுமின்றி நான் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதனையும் ஏற்றுக்கொள்கின்றேன்.

திகதி :................................

......................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

09. விண்ணப்பதாரரின் ஒப்பத்தினை உறுதிப்படுத்தல் :

இவ் விண்ணபத்தினைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி. ................................................ என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் அறிவேன் எனவும், அவர் எனது முன்னிலையில் ...................... ஆந் திகதி அவரது கையொப்பத்தினை இட்டார் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.

...................................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்
(உத்தியோகபூர்வ இலச்சினை மூலம்
உறுதிப்படுத்துதல் வேண்டும்)

முழுப் பெயர் :.................................................................................................
பதவி :.................................................................................................
முகவரி :.................................................................................................

10. திணைக்கள/ நிறுவனத் தலைவரின் உறுதிப்படுத்தல்: (அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மாத்திரம்)

இவ் விண்ணபதாரரான திரு./ திருமதி/ செல்வி ................................................ இத் திணைக்களத்தில்/ மாகாண சபையில்/ நிறுவனத்தில் ................................. ஆந் திகதி முதல் சேவையாற்றுகின்றார். அவர் இந்தப் பதவிக்காகத் தெரிவு செய்யப்படின் தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிக்கப்படுவார்/ விடுவிக்கப்பட மாட்டார் எனவும், ......................... ஆந் திகதி அவர் எனது முன்னிலையில் ஒப்பமிட்டார் என்பதனையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

.......................................................................
திணைக்கள/ நிறுவனத் தலைவரின் கையொப்பம்

பெயர் :.....................................................................................
பதவிப் பெயர் :.....................................................................................
திகதி :.....................................................................................
திணைக்களம்/ நிறுவனம் :.....................................................................................
உத்தியோகபூர்வ இலச்சினை மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்.)

09-240/2

## அரசகரும மொழிகள் திணைக்களம்

அரசகரும மொழிகள் திணைக்களத்தில் நிலவும் மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ ஆங்கிலம்), (சிங்களம்/ தமிழ்), (தமிழ்/ ஆங்கிலம்) தரம் II பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த/ மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2025

அரசகரும மொழிகள் திணைக்களத்தில் நிலவும் மொழிபெயர்ப்பாளர் (திணைக்களப் பதவி) தரம் II பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகத்தினால் 2025 ஆம் வருடம் நவெம்பர் மாதம் நடாத்தப்படும். இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான விண்ணப்பப்படிவம் அரசகரும மொழிகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.languagesdept.gov.lk எனும் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது என்பதுடன், 2025, ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் நிகழ்நிலை மூலம் (Online) விண்ணப்பித்தல் வேண்டும்.

02. அதற்கிணங்க, அரசகரும மொழிகள் திணைக்களத்தின் மொழிபெயர்ப்பாளர் (திணைக்களப் பதவி) தரம் II பதவிக்கு கீழ்க் காட்டப்பட்ட மொழிமூல வகைகளுக்கு அமைய ஆட்சேர்ப்புச் செய்யும் பொருட்டு தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| *பதவிப் பெயர்* | *ஆட்சேர்ப்புச் செய்யப்படும் பதவிகளின் எண்ணிக்கை* |
|---|---|
| மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ தமிழ்) | 07 |
| மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ ஆங்கிலம்) | 06 |
| மொழிபெயர்ப்பாளர் (தமிழ்/ ஆங்கிலம்) | 04 |

03. **ஆட்சேர்ப்புச் செய்யப்படும் வீதம்:**

| *பிரிவு* | *வீதம்* |
|---|---|
| திறந்த | 75% |
| மட்டுப்படுத்தப்பட்ட | 25% |
| திறமை | ஏற்புடையதாகாது |

**குறிப்பு**: திறந்த பிரிவின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு உரிய தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகள் போதிய அளவில் இல்லாதிருக்கும் பட்சத்தில், அவ் வெற்றிடங்கள் மட்டுப்படுத்தப்பட்ட பிரிவின் கீழ் நிரப்பப்படும். மட்டுப்படுத்தப்பட்ட பிரிவின் கீழ் ஆட் சேர்ப்புச் செய்வதற்கு உரிய தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகள் போதிய அளவில் இல்லாதிருக்கும் பட்சத்தில், அவ்வெற்றிடங்கள் திறந்த பிரிவின் கீழ் நிரப்பப்படும்.

04. இப்பதவிக்கு நியமிக்கப்படுவோரின் எண்ணிக்கை, நியமனம் அமுலுக்கு வரும் திகதி என்பன அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும் என்பதுடன், எல்லா வெற்றிடங்களையும் நிரப்புதல், ஒருசில வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது வெற்றிடங்களை நிரப்பாதிருக்கும் உரிமை அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகத்தைச் சாரும்.

05. இப்பதவிக்கு நியமிக்கப்பட்டு மூன்று (03) வருடங்கள் கடப்பதற்கு முன் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.

06. நீங்கள் நியமனம் பெறுவதற்குத் தகைமை பெறும் மொழிமூலத்திற்கு அமைய, 2020.10.16 ஆந் திகதிய 18/2020 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையிலும் அதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கைகளிலும் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய உரியவாறு அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

07. 2022.12.14 ஆம் திகதிய 2310/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழு நடவடிக்கைமுறை விதிகளுக்கும் தாபனவிதிக்கோவை ஏற்பாடுகளுக்கும் அமைய மொழிபெயர்ப்பாளர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

08. எல்லா ஆட்சேர்ப்புகளும், அங்கீகரிக்கப்பட்ட ஆட் சேர்ப்பு நடைமுறைக்கும், காலத்திற்குக் காலம் ஆட்சேர்ப்பு நடைமுறையில் மேற்கொள்ளப்படுகின்ற திருத்தங்களுக்கும் கட்டுப்பட்டதாக இருக்கும்.

09. **இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம்:**

ரூ. 62,230 – 10 x 1,190 – 11x 1,360 – 15 x 1, 670 – ரூ. 114,140/-(MN-6-2025)

10. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையது மாகும். ஓய்வூதியத்திட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் எடுக்கப்படுகின்ற கொள்கைத் தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்படுதல் வேண்டும். அத்துடன், நீங்கள் விதவை, அநாதை ஓய்வூதியத் திட்டத்திற்கு/ தபுதாரர், அநாதை ஓய்வூதியத் திட்டத்திற்கு அரசாங்கத்தினால் விதிக்கப்படுகின்றவாறு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

11. **தகைமைகள்:** மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ தமிழ்), (சிங்களம்/ ஆங்கிலம்) மற்றும் (தமிழ்/ ஆங்கிலம்) பதவிகளுக்கு திறந்த/ மட்டுப்படுத்தப்பட்ட அடிப் படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைகள் வருமாறு:

**மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ ஆங்கிலம்):**

i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றிலிருந்து பட்டம் பெற்றிருத்தல்,

அத்துடன்

ii. க.பொ.த. (சா/த) பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையொன்றில் சிங்கள மொழிக்கு திறமைச் சித்தியும், ஆங்கில மொழிக்கு அல்லது இலக்கியத்திற்கு திறமைச் சித்தியும் பெற் றிருத்தல்,

மற்றும்

iii. சிங்களம், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழி களிலும் கணினி சொல்முறைவழிப்படுத்தல் (Word processing) செயன்முறைப் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்

**மொழிபெயர்ப்பாளர் (தமிழ்/ ஆங்கிலம்):**

i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றிலிருந்து பட்டம் பெற்றிருத்தல்,

அத்துடன்

ii. க.பொ.த. (சா/த) பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையொன்றில் தமிழ் மொழிக்கு திறமைச் சித்தியும், ஆங்கில மொழிக்கு அல்லது இலக்கியத்திற்கு திறமைச் சித்தியும் பெற்றிருத்தல்,

மற்றும்

iii. தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் கணினி சொல்முறைவழிப்படுத்தல் (Word processing) செயன்முறைப் பரீட்சையில் சித்தி யெய்துதல் வேண்டும்.

**மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ தமிழ்):**

i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றிலிருந்து பட்டம் பெற்றிருத்தல்,

அத்துடன்

ii. க.பொ.த. (சா/த) பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையொன்றில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிக்கு பிரதான பாடமாகத் தோற்றி திறமைச் சித்தி பெற்றிருத்தல் அல்லது மற்றைய மொழியில் இரண்டாம் மொழி மட்டத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய உயர் தகைமையுடன் முதலாம் மொழிக்கு திறமைச் சித்தி பெற்றிருத்தல்;

மற்றும்

iii. சிங்களம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் கணினி சொல்முறைவழிப்படுத்தல் (Word processing) செயன்முறைப் பரீட்சையில் சித்தி யெய்துதல் வேண்டும்

11.1. **உடற்றகைமைகள்:**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கைத் தீவின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல், உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

11.2. **ஏனைய தகைமைகள்:**

விண்ணப்பதாரிகள்,

1. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
2. சிறந்த நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.
3. விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற அறிவித் தலில்/ வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிக்கு, இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப் படுவதற்குத் தேவையான தகைமைகளை எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
4. மட்டுப்படுத்தப்பட்ட பிரிவின் கீழ் விண்ணப் பிக்கும் விண்ணப்பதாரிகள், ஏற்கனவே அரச சேவையிலுள்ள, நிரந்தரப் பதவி வகிக்கும் அத்துடன் பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட உத்தியோகத் தர்களாக இருத்தல் வேண்டும்.

12. **வயதெல்லை:**

**திறந்த:** விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 21 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**மட்டுப்படுத்தப்பட்ட**: வயதெல்லை ஏற்புடையதாகாது.

**கவனிக்கவும்:** ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இப் பதவிக்கு நியமிக்கப்படுதவற்குத் தேவையான எல்லாத் தகைமைகளையும் 2025, ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்திசெய்திருப்பது கட்டாயமாகும்.

13. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**: எழுத்து மூலப் பரீட்சையிலும், செயன்முறைப் பரீட்சையிலும் பெற்றுக்கொள்ளும் பெறுபேறுகளின் அடிப்படையில் விண்ணப்பதாரிகள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள் என்பதுடன் பொதுவான நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் தகைமைகள் பரீட்சிக்கப்படும்.

13.1. எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியெய்தும் விண்ணப்பதாரிகள் அனைவரும் கணினி சொல்முறைவழிப்படுத்தல் (Word processing) செயன்முறைப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். எழுத்துமூலப் பரீட்சையிலும், செயன்முறைப் பரீட்சையிலும் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகளுள் இருந்து, நிலவும் வெற்றிடங்களைப் போன்று இருமடங்கு விண்ணப்பதாரிகள் பொதுவான நேர்முகப் பரீட் சைக்கு அழைக்கப்படுவார்கள்.

14. **பரீட்சை நடைமுறை:**

14.1. **பரீட்சைக்கான பாடத்திட்டம்:**

**குறிப்பு:** இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிமூலங்களில் நடைபெறும் என்பதுடன், விண்ணப்பதாரிகள் தெரிவுசெய்யும் மொழி வகைக்கு அமைய மொழிமூலம் தீர்மானிக்கப்படும். அதற்கமைய மொழி மூலத்தையும் விண்ணப்பதாரிகளினால் தெரிவு செய்யப்படுகின்ற மொழி வகையையும் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| | *வினாத்தாள்* | *பாடத்திட்டம்* |
|---|---|---|
| மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ ஆங்கிலம்) | 1. மொழிபெயர்ப்பு - சிங்கள மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு | • நிருவாகம், சட்டம், விஞ்ஞானம், தொழில்நுட்பம், கலை, இலக்கியம், சமயம் சார்ந்த ஆவணங்களிலிருந்து 03 பந்திகளைத் தெரிவு செய்து சிங்கள மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு மொழிபெயர்த்தல். |
| | 2. மொழிபெயர்ப்பு - ஆங்கில மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு | • நிருவாகம், சட்டம், விஞ்ஞானம், தொழில்நுட்பம், கலை, இலக்கியம், சமயம் சார்ந்த ஆவணங்களிலிருந்து 03 பந்திகளைத் தெரிவு செய்து ஆங்கில மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு மொழிபெயர்த்தல். |
| | 3. சிங்கள மொழி | • கட்டுரை எழுதுதல், சுருக்கம் எழுதுதல், வழங்கப்பட்ட பந்தியொன்றை சுருக்கி தமது மொழிநடையில் எழுதுதல், சொற்களின் கருத்து வெளிப்படுமாறு வாக்கியங்களை அமைத்தல், வாக்கியங்களில் காணப்படுகின்ற இலக்கண வழுக்களைத் திருத்தி எழுதுதல், மரபுத் தொடர்களை விளக்குதல் மற்றும் சொல்எழுத்தாக்கம் (Spelling). |
| | 4. ஆங்கில மொழி | • கட்டுரை எழுதுதல், வழங்கப்பட்ட சொற்களைப் பயன்படுத்தி அவற்றின் கருத்து வெளிப்படுமாறு வாக்கியங்களை அமைத்தல், மரபுத் தொடர்களை விளக்குதல் மற்றும் கூட்டு வாக்கியங்களையும், கலப்பு வாக்கியங்களையும் விளக்குதல். |
| மொழிபெயர்ப்பாளர் (தமிழ்/ ஆங்கிலம்) | 1. மொழிபெயர்ப்பு - தமிழ் மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு | • நிருவாகம், சட்டம், விஞ்ஞானம், தொழில் நுட்பம், கலை, இலக்கியம், சமயம் சார்ந்த ஆவணங்களிலிருந்து 03 பந்திகளைத் தெரிவு செய்து தமிழ் மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு மொழிபெயர்த்தல். |
| | 2. மொழிபெயர்ப்பு - ஆங்கில மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு | • நிருவாகம், சட்டம், விஞ்ஞானம், தொழில் நுட்பம், கலை, இலக்கியம், சமயம் சார்ந்த ஆவணங்களிலிருந்து 03 பந்திகளைத் தெரிவு செய்து ஆங்கில மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு மொழிபெயர்த்தல். |
| | 3. தமிழ் மொழி | • கட்டுரை எழுதுதல், சுருக்கம் எழுதுதல், வழங்கப்பட்ட பந்தியொன்றை சுருக்கி தமது மொழிநடையில் எழுதுதல், சொற்களின் கருத்து வெளிப்படுமாறு வாக்கியங்களை அமைத்தல், வாக்கியங்களில் காணப்படுகின்ற இலக்கண வழுக்களைத் திருத்தி எழுதுதல், மரபுத் தொடர்களை விளக்குதல் மற்றும் சொல்எழுத்தாக்கம் (Spelling). |
| | 4. ஆங்கில மொழி | • கட்டுரை எழுதுதல், வழங்கப்பட்ட சொற்களைப் பயன்படுத்தி அவற்றின் கருத்து வெளிப்படுமாறு வாக்கியங்களை அமைத்தல், மரபுத் தொடர்புகளை விளக்குதல் மற்றும் கூட்டு வாக்கியங்களையும், கலப்பு வாக்கியங்களையும் விளக்குதல். |

| | *வினாத்தாள்* | *பாடத்திட்டம்* |
|---|---|---|
| மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ தமிழ்) | 1. மொழிபெயர்ப்பு - சிங்கள மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு | • நிருவாகம், சட்டம், விஞ்ஞானம், தொழில்நுட்பம், கலை, இலக்கியம், சமயம் சார்ந்த ஆவணங்களிலிருந்து 03 பந்திகளைத் தெரிவு செய்து சிங்கள மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு மொழிபெயர்த்தல். |
| | 2. மொழிபெயர்ப்பு - தமிழ் மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு | • நிருவாகம், சட்டம், விஞ்ஞானம், தொழில்நுட்பம், கலை, இலக்கியம், சமயம் சார்ந்த ஆவணங்களிலிருந்து 03 பந்திகளைத் தெரிவு செய்து தமிழ் மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு மொழிபெயர்த்தல். |
| | 3. சிங்கள மொழி | • கட்டுரை எழுதுதல், சுருக்கம் எழுதுதல், வழங்கப்பட்ட பந்தியொன்றை சுருக்கி தமது மொழிநடையில் எழுதுதல், சொற்களின் கருத்து வெளிப்படுமாறு வாக்கியங்களை அமைத்தல், வாக்கியங்களில் காணப்படுகின்ற இலக்கண வழுக்களைத் திருத்தி எழுதுதல், மரபுத் தொடர்களை விளக்குதல் மற்றும் சொல்எழுத்தாக்கம் (Spelling). |
| | 4. தமிழ் மொழி | • கட்டுரை எழுதுதல், சுருக்கி எழுதுதல், வழங்கப்பட்ட பந்தியொன்றை சுருக்கி தமது மொழிநடையில் எழுதுதல், சொற்களின் கருத்து வெளிப்படுமாறு வாக்கியங்களை அமைத்தல், வாக்கியங்களில் காணப்படுகின்ற இலக்கண வழுக்களைத் திருத்தி எழுதுதல், மரபுத் தொடர்களை விளக்குதல் மற்றும் சொல்எழுத்தாக்கம் (Spelling). |

14.2. **புள்ளிகள் வழங்கப்படும் முறை:**

| | *வினாத்தாள்* | *காலம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்தியெய்துவ தற்குப் பெற்றுக் கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ ஆங்கிலம்) | 1. மொழிபெயர்ப்பு - சிங்கள மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு | 03 மணித்தியாலங்கள் | 100 | 40% |
| | 2. மொழிபெயர்ப்பு - ஆங்கில மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு | 03 மணித்தியாலங்கள் | 100 | 40% |
| | 3. சிங்கள மொழி | 1½ மணித்தியாலம் | 100 | 40% |
| | 4. ஆங்கில மொழி | 1½ மணித்தியாலம் | 100 | 40% |
| | | | | |
| மொழிபெயர்ப்பாளர் (தமிழ் / ஆங்கிலம்) | 1. மொழிபெயர்ப்பு - தமிழ் மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு | 03 மணித்தியாலங்கள் | 100 | 40% |
| | 2. மொழிபெயர்ப்பு - ஆங்கில மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு | 03 மணித்தியாலங்கள் | 100 | 40% |
| | 3. தமிழ் மொழி | 1½ மணித்தியாலம் | 100 | 40% |
| | 4. ஆங்கில மொழி | 1½ மணித்தியாலம் | 100 | 40% |
| | | | | |

| | *வினாத்தாள்* | *காலம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்தியெய்துவதற்குப் பெற்றுக் கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ தமிழ்) | 1. மொழிபெயர்ப்பு - சிங்கள மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு | 03 மணித்தியாலங்கள் | 100 | 40% |
| | 2. மொழிபெயர்ப்பு - தமிழ் மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு | 03 மணித்தியாலங்கள் | 100 | 40% |
| | 3. சிங்கள மொழி | 1½ மணித்தியாலம் | 100 | 40% |
| | 4. தமிழ் மொழி | 1½ மணித்தியாலம் | 100 | 40% |

- செயன்முறைப் பரீட்சை: செயன்முறைப் பரீட்சைக்கு 25 புள்ளிகள் வழங்கப்படும் என்பதுடன், இதில் சித்தியடைவதற்கு ஆகக் குறைந்தது 12 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

14.3 **பரீட்சை நிபந்தனைகள்:**

14.3.1 இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான விண்ணப்பப்படிவம் அரசகரும மொழிகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (https://www.languagesdept.gov.lk) பிரசுரிக்கப்பட்டுள்ளது என்பதுடன், நிகழ்நிலை மூலம் (Online) மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

14.3.2 நிகழ்நிலை மூலம் (Online) 2025 ஒக்றோபர் மாதம் 28 ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு முடிவுறும்.

14.3.3 நிகழ்நிலை மூலம் (Online) விண்ணப்பிக்கும் போது விண்ணப்பப்படிவத்தை ஆங்கில மொழியில் பூர்த்திசெய்தல் வேண்டும் என்பதுடன், முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் எந்தவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

14.3.4 இவ்வாறு சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பத்தை அச்சுப் பிரதியெடுத்து, விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பத்தை, அசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், பகிரங்க நொத்தாரிசு, முப்படையைச் சேர்ந்த அதிகார ஆணைபெற்ற உத்தியோகத்தர், அரச அல்லது மாகாண அரச சேவையைச் சேர்ந்த நிரந்தரப் பதவி வகிக்கும் பதவிநிலைத் தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர், பௌத்த விகாரை விகாராதிபதி அல்லது நாயக்கத் தேரர், பிற மத வழிபாட்டுத்தல மதகுருமார் ஆகியோரில் ஒருவர் மூலம் அத்தாட்சிப்படுத்திக்கொள்ளல் வேண்டும் என்பதுடன், ஏற்கனவே அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை, தமது திணைக்களத் தலைவர்/ நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவர் மூலம் மட்டும் அத்தாட்சிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

14.3.5 இவ்வாறு அத்தாட்சிப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தை எழுத்துமூலப் பரீட்சைக்குத் தோற்றும் போது எடுத்துவர வேண்டும் என்பதுடன், அதனை, பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டுடன் பரீட்சை மண்டப தலைமை மேற்பார்வையாளரிடம் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவரிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுப்பது கட்டாயமாகும்.

14.3.6 ஒரு விண்ணப்பதாரிக்கு ஒரு மொழி வகைக்கு மட்டுமே (சிங்களம்/ தமிழ் அல்லது சிங்களம்/ ஆங்கிலம் அல்லது தமிழ்/ ஆங்கிலம்) விண்ணப்பிக்க முடியும்.

15. **பரீட்சைக் கட்டணம்:** பரீட்சைக் கட்டணம் ரூ. 1,000.00 இத்தொகையை திறைசேரி செயற்பாட்டுப் பணிப்பாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு இல. 2003-99-00 இன் கீழ் தீவின் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் அல்லது மாவட்டச் செயலகத்திலும் செலுத்தலாம். இவ்வாறு பணம் செலுத்திய பின் விநியோகிக்கப்பட்ட பற்றுச்சீட்டை, நிகழ்நிலை மூலம் (Online) விண்ணப்பிக்கும் போது பதிவேற்றம் செய்தல் வேண்டும். (அதன் மூலப் பிரதியை பரீட்சைக்குத் தோற்றும் போது பரீட்சை மண்டப தலைமை மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். பற்றுச்சீட்டின் மூலப் பிரதி உங்கள் வசம் இல்லாவிடின் மீண்டும் பணம் செலுத்துவதற்கு நேரிடும் என்பதைக் கவனத்திற்கொள்ளவும்.) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது.

16. பரீட்சைக்குத் தோற்றும் போது பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்:

பரீட்சைக்குத் தோற்றும் போது பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு கீழ்க் காட்டப்பட்ட ஆவணங்களுள் ஒன்றை பரீட்சை மண்டப தலைமை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

i. ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை; அல்லது
ii. செல்லுபடியான கடவுச்சீட்டு; அல்லது
iii. செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

17. **பொய்யான தகவல்களை வழங்குதல்:**

i. விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்யும் போது, மிகக் கவனத்துடன் சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப்பரீட்சையுடன் தொடர்புடைய ஒழுங்குவிதிகளுக்கு அமைய, எவரேனும் பரீட்சார்த்தியொருவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவற்குத் தகுதியற்றவர் எனத் தெரியவருமாயின், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சையின் போது அல்லது பரீட்சைக்குப் பின் ஆகிய எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவருடைய பரீட்சார்த்தியுரிமை நிராகரிக்கப்படலாம்.

ii. பரீட்சார்த்தியினால் வழங்கப்பட்ட தகவல்கள் பிழையானதென அல்லது பொய்யானதென பிற்காலத்தில் தெரியவருமாயின் அல்லது அவர் தெரிந்து கொண்டே ஏதேனும் விடயமொன்றை ஒளித்து மறைத்துள்ளதாக தெரியவருமாயின், அவருக்கு நியமனம் வழங்குவது சம்பந்தமாக பரிசீலிக்கப்பட மாட்டாது என்பதுடன், இப் பரீட்சை காரணமாக வழங்கப்பட்ட நியமனமொன்றை இரத்துச்செய்வதற்கும் அல்லது அரச சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் அவர் ஆளாகலாம்.

18. அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டையொன்று விநியோகிக்கப் படுவதானது, பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளை பூர்த்திசெய்துள்ளார் என்பதாகக் கருதப்பட மாட்டாது. இப்பரீட்சையை நடாத்துவது தொடர்பில் அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்ட திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அச்சட்ட திட்டங்கள் மீறப்படும் பட்சத்தில் அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கு உட்படுவதற்கு பரீட்சார்த்திக்கு நேரிடும்.

19. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அது சம்பந்தமாக அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகத்தினால் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும். அத்துடன், இவ் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள பொதுவான சட்ட திட்டங்களுக்கும், அறிவுறுத்தல்களுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும்.

20. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரிசுரிக்கப்பட்டுள்ள இவ் வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலமான வாசகங்களுக்கிடையில் வேறுபாடுகள் அல்லது முரண்பாடுகள் காணப்படுமிடத்து, சிங்கள மொழிமூலமான வாசகம் மேலோங்கி நிற்கும்.

திலக் நந்தன ஹெட்டிஆரச்சி
அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகம்

அரசகரும மொழிகள் திணைக்களம்
இல. 341/7, கோட்டே வீதி,
இராஜகிரிய.
2025, செத்தெம்பர் மாதம் 16.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ ஆங்கிலம்)/ (சிங்களம்/ தமிழ்)/ (தமிழ்/ ஆங்கிலம்) தரம் II பதவிக்கான விண்ணப்பம்**
Application for the Post of Translator (Sinhala/English)/ (Sinhala/ Tamil) Tamil/English)

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

விண்ணப்பிக்கும் பதவி

01. மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ ஆங்கிலம்)
02. மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ தமிழ்)
03. மொழிபெயர்ப்பாளர் (தமிழ்/ ஆங்கிலம்)

(கூண்டினுள் உரிய இலக்கத்தை எழுதவும்.)

[விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்திசெய்யும் போது ஆங்கில பெரிய எழுத்துக்களில் (ENGLISH BLOCK CAPITAL LETTERS) பூர்த்திசெய்யவும். சிங்களம் அல்லது தமிழில் பூர்த்திசெய்யுமாறு கேட்கப்பட்டுள்ள இடங்களில் மட்டும் உரியவாறு சிங்களம் அல்லது தமிழில் பூர்த்திசெய்யவும்]

1. பெயர்:
   1.1 முதலெழுத்துக்களுடன் பெயர்: Mr./ Mrs./ Miss ........................................................
   .................................................................................................................
   1.2 முழுப் பெயர்: Mr./ Mrs./ Miss ....................................................................................
   .................................................................................................................
   1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்): திரு./ திருமதி/ செல்வி .......................................
   .................................................................................................................
   1.4 தேசிய ஆளடையாள அட்டை இல.: | | | | | | | | | | | | |

2. முகவரி:
   2.1 நிரந்தர முகவரி: ...........................................................................................................
   .................................................................................................................
   2.2 அலுவலக முகவரி: .........................................................................................................
   .................................................................................................................
   2.3 அலுவலக முகவரி (சிங்களத்தில்/ தமிழில்): ......................................................
   .................................................................................................................
   2.4 பரீட்சை அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி: ....................................
   .................................................................................................................
   2.5 கையடக்கத் தொலைபேசி இல.: ......................................
   WhatsApp தொலைபேசி இல.: ......................................
   கவனிக்கவும்: WhatsApp தொலைபேசி இலக்கமொன்றை கட்டாயமாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
   2.6 விண்ணப்பதாரர் நிரந்தரமாக வசிக்கும் மாவட்டம்: ......................................
   2.7 நிரந்தரமாக வசிக்கும் காலப்பகுதி: ......................................
   2.8 கிராம உத்தியோகத்தர் பிரிவு: ......................................

3.
   3.1 பால்: பெண் – 1 ஆண் – 0 [ ]
   (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

   3.2 சிவில் அந்தஸ்து:
   திருமணமானவர் – 1 திருமணமாகாதவர் – 2 [ ]
   (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

   3.3 பிறந்த திகதி:

   ஆண்டு: | | | | | மாதம்: | | | திகதி: | | |

   3.4 2025.10.28 ஆம் திகதிக்கு வயது:

   வருடங்கள்: | | | மாதங்கள்: | | | நாட்கள்: | | |

4. கல்வித் தகைமைகள்:
   4.1 பல்கலைக்கழகப் பட்டம் தொடர்பான விபரங்கள்:
      a. பல்கலைக்கழகப் பட்டம்: ........................
      b. பட்டம் பெற்ற வருடமும், பல்கலைக்கழகமும்: ........................
      c. பட்டப் படிப்பின் போது கற்ற பாடங்கள்: ..........................................................
      .................................................................................................................

4.2 க.பொ.த. (உயர் தரப்) பரீட்சை:

i. பரீட்சை வருடமும் மாதமும்: ……………………
ii. பரீட்சைச் சுட்டெண்: ……………………
iii. பரீட்சைப் பெறுபேறுகள்:

| | *பாடம்* | *சித்தி* |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

4.3 க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சை:

i. பரீட்சை வருடமும் மாதமும்: ……………………
ii. பரீட்சைச் சுட்டெண்: ……………………
iii. பரீட்சைப் பெறுபேறுகள்:

| | *பாடம்* | *சித்தி* | | *பாடம்* | *சித்தி* |
|---|---|---|---|---|---|
| 1. | | | 6. | | |
| 2. | | | 7. | | |
| 3. | | | 8. | | |
| 4. | | | 9. | | |
| 5. | | | 10. | | |

5. நீங்கள் எப்போதாவது ஏதேனும் குற்றவியல் குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? (கூட்டினுள் ✓ அடையாளத்தை இடவும்)

ஆம் ☐ இல்லை ☐

'ஆம்' எனில், அது சம்பந்தமான விபரங்களைத் தருக.: ……………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………………

6.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை:

இவ் விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள அனைத்துத் தகவல்களும் எனது அறிவுக்கு எட்டியவரை உண்மையானவை எனவும், சரியானவை எனவும் உறுதியளிக்கின்றேன். இவ் ஆட்சேர்ப்புப் பரீட்சை நிபந்தனைகளின் பிரகாரம், நான் இந்நியமனத்தைப் பெறத் தகுதியற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில், பரீட்சை நடைபெறுவதற்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சையின் பின் என்னுடைய பரீட்சார்த்தியுரிமையை இரத்துச் செய்வதற்கு எடுக்கப்படுகின்ற தீர்மானத்திற்கு நான் கட்டுப்படுகின்றேன்.

திகதி:……………………………… ………………………………………………
விண்ணப்பதாரியின் கையொப்பம்

(தனிப்பட்ட விண்ணப்பதாரிகளுக்காக)

விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்:

இவ் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ....................................................................................... அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும், அவர் தனது கையொப்பத்தை ...................... ஆம் திகதி எனது முன்னிலையில் இட்டார் என்பதையும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

திகதி:...................................

..............................................................
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்

அத்தாட்சிப்படுத்துபவரின்,
பெயர்: .........................................................
பதவி: ..............................................................
முகவரி: .............................................................
(உத்தியோகபூர்வ இறப்பர் முத்திரையைப் பதிக்கவும்)

(ஏற்கனவே அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்காக)
திணைக்களத் தலைவரின் சான்றுப்படுத்தல்:

இவ் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ............................................................ அவர்கள் ..................... ஆம் திகதி தொடக்கம் இந் நிறுவனத்தில் கடமையாற்றுகின்றார் என்பதையும், அவருடைய பணிகள் மற்றும் நடத்தை திருப்திகரமானது என்பதையும், மேற்படி விண்ணப்பதாரியால் வழங்கப்பட்டுள்ள தகவல்களை, இவ் அலுவலகத்தில் உள்ள அறிக்கைகள் மூலம் நான் தனிப்பட்ட முறையில் பரீட்சித்துப் பார்த்தேன் என்பதையும், அத்தகவல்கள் சரியானது என்பதையும், 2025 ........... மாதம் .......... ஆம் திகதி அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் இட்டார் என்பதையும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன். இவர் இப்பதவிக்கு தெரிவுசெய்யப்படும் பட்சத்தில், இவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது.

திகதி:...................................

.....................................................................
திணைக்கள/ நிறுவனத் தலைவரின் கையொப்பம்

பெயர்: .............................................................
பதவி: ..............................................................
முகவரி: .............................................................
(உத்தியோகபூர்வ இறப்பர் முத்திரையைப் பதிக்கவும்)

(பணம் செலுத்திய பின் விநியோகிக்கப்பட்ட பற்றுசீட்டை இங்கே ஒட்டவும்)

| **அலுவலக உபயோகத்திற்கு** | |
|---|---|
| **பரீட்சைக் கட்டணம் செலுத்தியமை பற்றிய தகவல்கள்** | |
| தேசிய ஆளடையாள அட்டை இல. | |
| விண்ணப்பப்படிவ இல. | |
| பணம் செலுத்தப்பட்ட திகதி | |
| பரீட்சையின் பெயர் | |
| செலுத்திய தொகை | |

09-273

## கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

## தொழிற் கல்விப் பிரிவு

## தேசிய பயிலுநர் மற்றும் தொழிநுட்ப பயிற்சி அதிகார சபை

### கைத்தொழில் பொறியியல் பயிற்சி நிறுவனம் - மொரட்டுவை

முழு நேர பாடநெறிகளுக்காக தேசிய தொழில் பயிலுநர்களை இணைத்துக்கொள்ளல் 2026 சனவரிக் குழு

இலங்கை மற்றும் ஜேர்மன் ஆகியவற்றின் இணைந்த கருத்திட்டம் ஒன்றாகிய மொரட்டுவை கைத்தொழில் பொறியியல் பயிற்சி நிறுவனத்தின் (IETI) கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகளைக் கற்பதற்காக விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்தச் சகல பாடநெறிகளும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புத் தேவைப்பாடுகளுக்குப் பொருந்தும் வகையில் மிகவும் உயர் மட்டத்திலான கோட்பாட்டு ரீதியான மற்றும் செயன்முறை ரீதியான பகுதிகளை உள்ளடக்கிய வகையில் பயிலுநருக்கு துறை தொடர்பான தேவையான மேலதிக அறிவினை உள்ளடக்கிய வகையில் தயாரிக்கப்பட்ட நாட்டின் முன்னணிப் பாடநெறிகள் ஆகும்.

கைத்தொழில் பொறியியல் பயிற்சி நிறுவனத்தின் மூலம் வழங்கப்படும் முழு நேர பாடநெறிச் சான்றிழ் மற்றும் அதற்குரிய மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவின் மூலம் வழங்கப்படும் தேசிய தொழிற் தகைமைச் (NVQ 04 ஆம் மட்டம்) சான்றிதழ் என்பன கிடைக்கப்பெறும்.

1. **நடாத்தப்படும் பாடநெறிகள்:**

| | *பாடநெறிகளின் விபரங்கள்* | *பாடநெறிக் கட்டணங்கள் ரூ.* | *காலம்* |
|---|---|---|---|
| 01, 02, 03, 04, 05, தொழிற் துறைகளுக்காக க. பொ. த. (சா. தரம்) பரீட்சையில் கணிதம் அல்லது விஞ்ஞானம் பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் க. பொ. த. (சா. தரம்) பரீட்சையில் சிங்கள மொழி, கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்து இருத்தல் அல்லது க. பொ. த. (உ/தரம்) பொறியியல் தொழில்நுட்பத்துறை அல்லது தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம் ஆகிய இரு பாடங்களுள் ஒரு பாடத்தில் சித்தியடைந்து இருத்தல் மற்றும் க. பொ. த. (சா. தரம்) சிங்கள மொழி, விஞ்ஞானம் மற்றும் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்து இருத்தல். | | | |
| 01. | **இலத்திரனியல் தொழில்நுட்பவியலாளர் (விஷேட) - Electronics Craftsman (Special)**<br>ஆரம்பச் செயலமர்வுப் பயிற்சி, வீட்டு மின் இணைப்பினைப் பொருத்துதல், அனலொக் மற்றும் டிஜிட்டல் இலத்திரனியல் உபகரணங்கள் தொடர்பாடல் முறைமைகள், தைரிஸ்ரோல் வலுக் கட்டுப்பாடு, பிஎல்சி மற்றும் மைக்ரோ கட்டுப்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட கட்டுப்பாட்டு முறைமைகள் (PIC & ARDUINO), சூரிய சக்தி முறைமைகள் மற்றும் கருத்திட்ட நடவடிக்கைகள். | 150,000/- | 03 வருடங்கள் |
| 02. | **மின் தொழில்நுட்பவியலாளர் (விஷேட) Electrician (Special)**<br>ஆரம்பச் செயலமர்வுப் பயிற்சி, வீட்டு மற்றும் கைத்தொழில் மின் சுற்றுக்கள் மின் அளவையியல் உபகரணங்கள், தொடர்பாடல் மற்றும் பாதுகாப்பு முறைமைகள், மின் இயந்திரம் மற்றும் மோட்டார் கட்டுப்பாட்டு முறைமை, வாயு மற்றும் மின் வாயுக் கட்டமைப்பு முறைமை பொறிமுறை முறைமை மின் தொழில்நுட்பம் மற்றும் மின் கணிதம். | 150,000/- | 03 வருடங்கள் |
| 03. | **நிர்மாணிப்புக்கள் கண்காணிப்பாளர் - Construction Supervisor**<br>கட்டிட நிர்மாணிப்பு முகாத்துவம், அடிப்படைச் செயலமர்வுப் பயிற்சி, நிர்மாணிப்புத் தொழில்நுட்பம் தொடர்பான அடிப்படை விடணங்கள், பொறியியல் மற்றும் கட்டிடக்கலைச் சித்திரங்கள் மற்றும் ஒடோ கெட், கட்டிட நிர்மாணப் பொருட்கள், அளவைகள் மற்றும் மட்டம் செய்தல், நீர் விநியோகம், வடிகாலமைப்பு மற்றும் மலசல வடிகால் கட்டமைப்புக்கள், வீதிகளை நிர்மாணித்தல் மற்றும் அளவீட்டு அளவைகள் மற்றும் செலவு மதிப்பீடுகள். | 100,000/- | 01 ½ வருடங்கள் |
| 04. | **அளவீடுகள் அளவை உதவியாளர் - Quantity Surveying Assistant**<br>சிறு மற்றும் நடுத்தர அளவிலான நிர்மாணிப்புக்களுக்காக BOQ தயாரித்தல், BOQ, விலைகளை நிர்ணயித்தல், விலைமனு ஆவணங்கைளத் தயாரித்தல் | 50,000/- | 01 வருடம் |

| | *பாடநெறிகளின் விபரங்கள்* | *பாடநெறிக் கட்டணங்கள் ரூ.* | *காலம்* |
|---|---|---|---|
| 05. | **வரைபட தொழில்நுட்பவியலாளர் - Draughtsperson**<br>கட்டிட நிர்மாணிப்பு, கட்டிடச் சேவைகள், கணிதம், அட்சரகணித மற்றும் பொறிமுறை ரீதியான வரைதல்கள், அளவைகள் மற்றும் மட்டம் செய்தல், Auto CAD, மின் மற்றும் நீர்க்குழாய் வரைதல்கள், அலுவலக நடவடிக்கைகளை வரைதல், கட்டிடச் சேவைகளை வரைதல். | 80,000/- | 01 ½ வருடங்கள் |
| | 06, 07 தொழில்துறைகளுக்காக க. பொ. த. (சா. தரம்) பரீட்சையில் சிங்கள மொழி, கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்து இருத்தல். | | |
| 06. | **குளிர்ச்சாதனப் பெட்டிகள் மற்றும் வாயு பதனிடல் பொறிமுறைத் தொழிநுட்பவியலாளர் - Refrigeration & Air Conditioning Mechanic**<br>அடிப்படைச் செயலமர்வுப் பயிற்சி, சகல வகையான குளிர்சாதனப் பெட்டிகள், வீட்டு மற்றும் கைத்தொழில் வாயுப்பதனாக்கி முறைமைகள், குளிர்சாதனத் திருத்தியமைத்தல் மற்றும் மீள்சுழற்சி முறைகள். | 100,000/- | 02 வருடங்கள் |
| 07. | **இயந்திரவியல் தொழில்நுட்பவியலாளர் (விஷேட) Machinist (Special)**<br>லேத், அரைத்தல், அரைக்கும் இயந்திர செயல்பாடு, நியூமேடிக் மற்றும் ஹைட்ராலிக் அமைப்புகள், வெப்ப சிகிச்சை, CNC திரலாக்கம், CNC இயந்திரம், EDM செயல்முறை, கம்பி வெட்டும் செயல்முறை, லேசர் வெட்டுதல்.<br>திண்ம வேலைகள் Auto Cad | 150,000/- | 03 வருடங்கள் |
| | 08, 09 தொழிற்துறைகளுக்காக க. பொ. த. (சா. தரம்) பரீட்சையில் சிங்கள மொழி, ஆங்கில மொழி மற்றும் கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல். | | |
| 08. | **தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர் - Information & Communication Technology Technician**<br>கோப்புக்கள் மற்றும் கோப்புறைகளைப் பராமரித்தல் word processing, இனை மேற்கொள்ளல், விரிதாள்கள் (spread sheets) தயாரித்தல், presentations களைத் தயாரித்தல், கிளௌட் கம்ப்யூட்டிங் உட்பட இணையத்தள மற்றும் மின்னஞ்சல் சேவைகளின் அடிப்படைச் செயற்பாடுகளை மேற்கொள்ளல் அடிப்படைத் தரவுத் தொகுதிகளைக் கையாள்வதை மேற்கொள்ளல், கம்பியூட்டர் முறைமை, வலைத்தள மற்றும் சாதனங்கள், அச்சுப் பிரதித் தளவமைப்புக்களைத் தயாரித்தல் மற்றும் பல்லூடகப் பொருட்கள், முறைமைப் பகுப்பாய்வு மற்றும் வடிவமைப்புக்கள், SQL தர நியமங்களைப் பயன்படுத்தி தரவுத் தளங்கள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் நிலையியல் வலைத்தளங்களை வடிவமைத்தல், டெஸ்க்டொப் பயன்பாடுகளை விருத்தி செய்தல். | 40,000/- | 01 வருடம் |
| 09. | **கணினி ஓவிய வடிவமைப்பியலாளர் - Computer Graphic Designer**<br>Adobe Photoshop, Adobe Illustrator, Adobe Indesign, அச்சுப்பதிப்பு மற்றும் ஸ்கேன் முறைகள், கணினி வன்பொருட்கள் மற்றும் மென்பொருட்கள், நிறக் கோட்பாடுகள் மற்றும் உள்ளீட்டுப் படங்கள், கட்புல ஊடகத் தொழில்நுட்பத்தின் அடிப்படை விடயங்கள், அச்சுக்கலை, படங்களைத் தொகுத்தல் மற்றும் கையாளுதல், விளக்கப்படங்கள் தளவமைப்புக்களை வடிவமைத்தல், வலைத்தளம் மற்றும் ஏனைய பல்லூடக வகைகளுக்கான தளவமைப்புக்களை வடிவமைத்தல். | 40,000/- | 01 வருடம் |
| | 10, தொழில்துறைகளுக்காக க. பொ. த. (சா. தரம்) பரீட்சையில் சிங்கள மொழி கணிதம் மற்றும் ஆங்கில மொழி ஆகிய பாடங்களுக்காக திறமைச் சித்தியுடன் - க. பொ. த. (சா. தரம்) பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல். | | |
| 10. | **செயலாளர் செயன்முறை (ஆங்கில மொழி) - Secretarial Practices (English Medium)**<br>சேவை நிலையத் தொடர்பாடல் மற்றும் ஆளிடைத் தொடர்புகள் என்பவற்றைப் பயிற்றுவித்தல், தொழில்சார் எழுத்தறிவு மற்றும் புள்ளிவிபரங்களைப் பயன்படுத்தல், குழுக்களாக வேலை செய்தல், தொழில் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளைப் பயிற்றுவித்தல், தபாலினைக் கையாளுதல், கடிதப் பரிமாற்றங்களைக் கையாளுதல், வாடிக்கையாளர்கள்/ அமைப்புக்களுடன் உறவுகளைக் கட்டியெழுப்புதல் மற்றும் பேணி வருதல், கூட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்தல், பிரயாண ஏற்பாடுகளைச் செய்தல், கோப்பிடும் முறைகளை விருத்தி செய்தல் மற்றும் பேணி வருதல், நாளேடுகளையும் மற்றும் நேர ஒதுக்குகளையும் பேணி வருதல், அலுவலக முகாமை, கணினிப் பயன்பாட்டு மென்பொருட்கள் ஆங்கில தட்டெழுத்து மற்றும் சுருக்கெழுத்து ஆகிய பயிற்சிகள். | 80,000/- | 01 ½ வருடங்கள் |
| | 11, 12, 13, 14, 15 தொழிற்துறைகளுக்காக க. பொ. த. (சா. தரம்) வரை கல்வி கற்றிருத்தல். | | |

| | பாடநெறிகளின் விபரங்கள் | பாடநெறிக் கட்டணங்கள் ரூ. | காலம் |
|---|---|---|---|
| 11. | **வேல்டிங் தொழிநுட்பவியலாளர் (விஷேட) - Welder (Special)**<br>MMA/ GAS/ TIG/ MIG/MAG/FCAW/PLASMA/SPOT/STUD Welding நுட்ப முறைகள், Destructive & Non Destructive Testing Methods, Plate & Pipe weld. | 150,000/- | 03 வருடங்கள் |
| 12. | **அச்சுப்பதிப்பினைப் பூர்த்தி செய்பவர் - Print Finisher**<br>Hard Binding,புத்தகம் மீள் கட்டுதல் (Rebinding), தாள்களை மடிக்கும் இயந்திரங்கள் (Folding Machine), தாள்களை சேகரிக்கும் இயந்திரங்கள் (Gathering Machine), புத்தகங்களை தைக்கும் இயந்திரங்கள் (Sewing Machine), வயர் தைத்தல் (Wire Stitching), Perfect Binding/ Cover Pasting Machine, தாள்களை வெட்டும் இயந்திரங்கள் (Guillotine Machine), தாள்களை வெட்டும் இயந்திரங்கள் (3 Knife Trimmer), Die Cutting/ Embossing/ Debossing, Machine, Foiling Machine, லெமினேட்டிங் இயந்திரங்கள், UV வார்னிஷ் Cartoon Pasting/ Folder gluing Machine. | 15,000/- | 01 ½ வருடங்கள் |
| 13. | **லிதோ இயந்திர இயக்குநர் - Offset Machine Operator**<br>ஓப்செட் இயந்திரத்தின் அடிப்படைச் செயற்பாடுகளை மேற்கொள்ளல், ஓப்செட் இயந்திரங்களைத் தயார் செய்தல் மற்றும் அச்சுப்பதிப்பு செய்தல், ஓப்செட் இயந்திரங்களைப் பராமரித்தல், sheet fed/ web offset இயந்திரங்களின் அச்சுப்பதிப்பிற்குரிய அடிப்படைச் செயற்பாடுகளை மேற்கொள்ளல், சேவை நிலையத் தொடர்பாடல் மற்றும் ஆளிடைத் தொடர்புகளைப் பயிற்றுவித்தல், தொழில் சார் எழுத்தறிவு மற்றும் புள்ளிவிபரவியல் பயன்பாடுகள், குழுக்களாக வேலை செய்தல், தொழில் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றைப் பயிற்றுவித்தல். | 15,000/- | 01 வருடம் |
| 14. | **தச்சுத் தொழில்நுட்பவியலாளர் (தளபாடங்கள் மற்றும் கட்டிடங்கள்) - Carpenter (Furniture and Building)**<br>கைவினை ஆயுதங்களின் பாவனை மற்றும் ஆரம்ப பலகைகளை மூட்டுக்களினால் இணைத்தல் மற்றும் நவீன இயந்திரங்களைப் பாதுகாப்பாகப் பயன்படுத்தி பலகைகள் மற்றும் இணைந்த பலகைகளின் மூலம் தளபாட உற்பத்தி, கைவினை ஆயுதங்கள் மற்றும் இயந்திரங்களின் வெட்டும் தளங்களை தீட்டி வைத்தல் மற்றும் பராமரித்தல் நவீன உபகரணங்கள் மற்றும் ஆயுதங்களின் பாவனையின் மூலம் தளபாடங்களை மினுக்கும் (பொலிஷ் செய்தல்), தளபாடத் தொழிநுட்பம் தொடர்பான கோட்பாட்டு ரீதியான அறிவு, தொழிநுட்ப வரைதல்கள் மற்றும் தொழிநுட்பக் கணிதப் பாவனையின் மூலம் மதிப்பீட்டினைத் தயாரித்தல், கூரை, சிவிலிம்களை நிர்மாணித்தல், கதவு, யன்னல் சட்டகங்களைத் தயாரித்தல், படிக்கட்டுக்களுக்கு பலகைகளைப் பொருத்துதல், பகுதிகளாக்கும் பொருத்துதல்களை நிரமாணித்தல், ஷட்டரிங்களை அமைத்தல். | 20,000/- | 02 வருடங்கள் |
| 15. | **அலுமினியம் பெப்ரிகேட்டர் - Aluminum Fabricator**<br>அலுமினியத்தினாலான கதவு யன்னல்களைத் தயாரித்தல், வேறாக்கும் பொருத்துதல்களினால் (Partitions), கடைகள், கதவுகள் மற்றம் நிலப்பகுதிகளைப் பிரித்தல், ஏணிகளை நிர்மாணித்தல், Glass and tempered glass களைப் பொருத்துதல், கண்காட்சிக் கபட்களைத் தயாரித்தல், குளியலறைகளை வேறாக்குதல் (Shower cubicles), உட்பகுதிக் கதவுகளை நிர்மாணித்தல் மற்றும் பொருத்துதல் (Roller doors) அலுமினியம் சிவிலிம்களை நிர்மாணித்தல் மற்றும் பொருத்துதல், ஏனைய அலுமினியத்தினாலான சாதனங்களைப் பொருத்துதல். | 20,000/- | 01 வருடம் |
| 16. | **பல்திறன் தொழில்நுட்பவியலாளர் - Multi Skilled Technician**<br>மேசன் வேலை, நீர்க்குழாய் வேலை, தச்சு வேலை, மின் வேலை, வாயுப் பதனாக்கிப் பராமரிப்பு, ஆரம்ப அலுமினியம் தயாரிப்பு நடவடிக்கைகள், சேவை நிலையத் தொடர்பாடல், தொழில் சார் எழுத்தறிவு, தொழில் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு. | 40,000/- | 01 ½ வருடம் |
| | 16 தொழில் துறைக்கான ஆகக் குறைந்தது தரம் 08 வரை கல்வி கற்றிருத்தல் | | |

| | *பாடநெறிகளின் விபரங்கள்* | *பாடநெறிக் கட்டணங்கள் ரூ.* | *காலம்* |
|---|---|---|---|
| 17. | **நீர்க்குழாய் செப்பனிடு தொழில்நுட்பவியலாளர் - Plumber**<br>தற்போதாகும் போது கைத்தொழில் துறையில் பயன்படுத்தப்படும் PVC, CPVC, GI, PB, PPR குழாய் வகைகளை இணைத்தல், நவீன துப்பரவு பேண் சாதனங்களைப் பொருத்துதல் நீர்ப்பம்பிகளைப் பொருத்துதல், சுடுநீர் குழாய்க் கட்டமைப்பினைப் பொருத்துதல் மற்றும் திட்ட வடிவமைப்பினை அடையாளம் காணல் மற்றும் மதிப்பீடுகளைத் தயாரித்தல் | 60,000/- | 02 வருடங்கள் |

- **பாடநெறிகளுக்கான கட்டணங்களைத் தவணை முறையில் செலுத்த முடியும் .**

02. **வயது** :

2025.10.31 ஆந் திகதியன்று 16 வருடங்களுக்குக் குறையாமலும் 35 வயதினை மிகைக்காமலும் இருத்தல் வேண்டும்.

03. **பயிற்சி தொடர்பான விபரம்** :

3.1 சகல பாடநெறிகளும் இரட்டைப் பயிற்சி முறையின் கீழ் திட்டமிடப்பட்டு சிங்கள மொழி மூலம் கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் தொழிற் பயிற்சியின் முதல் அரைப்பகுதியில் ஆரம்பப் பயிற்சி நிறுவனத்திலும் பயிற்சியின் இரண்டாவது அரைப்பகுதியில் மேலதிக பயிற்சிக்காக அரச மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தனியார் நிறுவனங்களின் கைத்தொழிற்சாலைகளுக்கும் இணைக்கப்படுவர். சகல தொழிற்துறைகளுக்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளதுடன் சகல பாடநெறிகளுக்கும் ஆங்கில மொழி அறிவு வழங்கப்படும்.

04. **தெரிவு செய்யும் முறை** :

எழுத்து மூலப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம்

05. **பயன்கள்** :

5.1 தூரத்திற்கு அமைய வதிவிட வசதிகள் (ஆண் மாணவர்களுக்கு மாத்திரம்)

5.2 நூலக வசதிகள்

5.3 சலுகை விலைக்கு உணவு பானங்கள்

5.4 சலுகை விலைக்கு இபோச தவணை அனுமதிப் பத்திரங்கள்

5.5 குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களின் பயிலுநர்களுக்கு ரூ. 5000.00 மாதாந்தக் கொடுப் பனவுகள்

06. **விண்ணப்பங்கள் அனுப்பி வைக்க வேண்டிய முறை** :

6.1 கீழே தரப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைய 11½" x 8 ¼" (A4) அளவிலான தாள் ஒன்றில் தயாரித்துக் கொள்ளப்பட்ட அல்லது www.naita.gov.lk வலைத்தளத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பப்படிவத்தினைப் பூர்த்தி செய்து தங்களது தேசிய ஆளடையாள அட்டையின் பிரதி ஒன்றுடன் 2025.10.31 ஆந் திகதிக்கு முன்னர் பணிப்பாளர்/ அதிபர், கைத்தொழில் பொறியியல் பயிற்சி நிறுவனம், இல. 581, காலி வீதி, கட்டுபெத்த, மொரட்டுவை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினை உள்ளிட்டு அனுப்பும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் "பயிலுநர்களை இணைத்துக் கொள்ளல் 2026 சனவரி" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும் என்பதுடன், தங்களது முகவரி குறிப்பிடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட நீண்ட கடிதவுறை ஒன்றினை விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

6.2 மக்கள் வங்கியின் கட்டுபெத்த கிளையில் கணக்கு இலக்கம் 313100153656984 இற்கு வைப்புச் செய்யுமாறு தெரிவித்துக் கொள்வதுடன் எந்தவொரு வங்கிக் கிளையிலும் ரூ. 1,000.00 இனைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை (விண்ணப்பதாரியின் பெயர் மற்றும் ஆளடையாள அட்டை இலக்கம் என்பன குறிப்பிடப்படுதல் வேண்டும்) விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும் என்பதுடன், அதன் பிரதி ஒன்றினை தம்வசம் வைத்துக் கொள்ளல் வேண்டும். அவ்வாறு இணைக்கப்பட்டிருக்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

6.3 ஒரு விண்ணப்பதாரி தனது தகைமைகளுக்கு அமைய விருப்பான மூன்று பாடநெறிகளின் பெயர்களை முன்னுரிமை ஒழுங்கு முறையில் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடுதல் வேண்டும்.

6.4 தபாலில் தொலைந்து போகும் அல்லது தாமதமாகிக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் தொடர்பில் கைத்தொழில் பொறியியல் நிறுவனம் பொறுப்புக்கூறமாட்டாது, தாமதத்தினைத் தவிர்த்துக் கொள்வதற்காக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை நேரகாலத்துடன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

எச். ஏ. சத்தார்,
தலைவர்,
தேசிய பயிலுநர் மற்றும்
தொழில்நுட்பப் பயிற்சி அதிகாரசபை.

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

| | | |
|---|---|---|
| | **கைத்தொழில் பொறியியல் பயிற்சி நிறுவனம்** | ஆவ. இல. : ADM/TRE/FM/02 |
| | Industrial Engineering Training Institute - Moratuwa | வழங்கிய இல. : 02 |
| | **பயிலுநர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவம் - 2026 சனவரி** | வழங்கிய திகதி : 2019.03.14 |
| | | மதிப்பாய்வு செய்தவர் : |
| | | அனுமதி வழங்கியவர் : |

அலுவலக உபயோகத்திற்காக மாத்திரம்

01. விண்ணப்பதாரியின் முழுப் பெயர் : ………………………………………………………………………… திரு./திருமதி/செல்வி
02. முதலெழுத்துக்களுடன் பெயர் :…………………………………………………………………………………………
03. முகவரி :…………………………………………………………………………………………………………
04. வதிவிடம் i. பிரதேச செயலாளர் பிரிவு :……………………………………………………………………
ii. மாவட்டம் :…………………………………………………………………………………………
05. தொலைபேசி இலக்கம் : வதிவிடம் : …………………… கையடக்கம் : …………………… WhatsApp இலக்கம் : ……………
மின்னஞ்சல் (Email) :…………………………………………………………………………………………
06. பிறந்த திகதி :
07. தேசிய ஆளடையாள அட்டை இல. :…………………………………………………………………………
08. கல்வித் தகைமைகள் (பெற்றுக் கொண்டுள்ள அதிகூடிய கல்வித் தகைமைகள் x அடையாளம் இடவும்.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க.பொ.த. (உ/தரம்) | | க.பொ.த. (சா. தரம்) | | தரம் 8 | |

க.பொ.த. (சா. தரம்) பெறுபேறுகள்

| | *பாடங்கள்* | *சித்தி* | *ஆண்டு* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

க.பொ.த. (உ/தரம்) பெறுபேறுகள்

| | *பாடங்கள்* | *சித்தி* | *ஆண்டு* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

09. தங்களது கல்வித் தகைமைகளுக்கு அமைய நீங்கள் கற்க விருப்பமான மூன்று பாடநெறிகளின் பெயர்களை முன்னுரிமை ஒழுங்கு முறையில் குறிப்பிடவும்.

| | |
|---|---|
| 01. | |
| 02. | |
| 03. | |

மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் உண்மையானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

……………………………… ………………………………..
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

09-259

## தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் II இற்கான முதலாவது வினைத்தின்காண் தடைப் பரீட்சை – 2016(2025)

## First Efficiency Bar Examination for Grade II Statistical Officers in the Department of Census & Statistics - -2016(2025)

01. தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளி விபர உத்தியோகத்தர் பதவிக்குரிய அலுவலர்கள் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் II பதவிக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் 2026, சனவரி மாதத்தில் நடாத்தப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகிறது. விண்ணப்பப்படிவம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் “எங்கள் சேவை” என்ற பிரிவில் “இணைய விண்ணப்பங்கள் – ஆட்சேர்ப்புத் தேர்வுகள்/E. B. தேர்வுகள்” என்ற பிரிவில் கிடைப் பதுடன், விண்ணப்பங்களை இணைவழியூடாக மட்டுமே சமர்ப்பிக்க முடியும். இணையவழியூடாக விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது 2025, செத்தெம்பர் 29 ஆந் திகதி காலை 09.00 மணிக்குத் தொடங்கி, 2025, ஒற்றோபர் 24 ஆந் திகதி இரவு 09.00 மணிக்கு முடிவடையும். விண்ணப்பம் இணையவழியூடாக வெளியிடப்பட்டதும், அதைப் பதிவிறக்கம் செய்து அச்சிடப்பட்ட பிரதியின் தொடர்புடைய பிரிவுகளை கையால் நிரப்பி, விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைவரின் சான்றுப்படுத்தலுடன் விண்ணப்பத்தை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

♦ குறிப்பு:

இறுதித் தேதி வரை விண்ணப்பங்களைச் சமர்ப்பிப் பதைத் தாமதப்படுத்துவதால் ஏற்படும் எந்தவொரு பாதகமான விளைவுகளையும் விண்ணப்பதாரரே ஏற்க வேண்டும்.

02. (i) இப்பரீட்சை, இலங்கைப் பரீட்சைகள் திணைக் களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன், பரீட்சையை நடாத்துதல், பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக அவரால் விதிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். பரீட்சை நடத்துதல் மற்றும் பெறுபேறு வெளியிடல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

(ii) பரீட்சார்த்திகளுக்கான விதிமுறைகள், வர்த்தமானி யில் பிரத்தியேகமாக அச்சிடப்பட்டுள்ளது. இவ்விதி முறைகளை மீறுமிடத்து, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

03. **பரீட்சைக் கட்டணம் :**

பரீட்சைக்குரிய பாடங்கள் பொருட்டு ஒரே தடவையில் அல்லது தனித்தனியாக தோற்ற முடியும். முழுமையாக அல்லது ஒரு பாடத்திற்கு முதல் தடவையாக தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப் படமாட்டாது. அதன் பின்னர் தோற்றும் ஒவ்வொரு தடவையும் ஒரு பாடத்துக்கு ரூபா 200.00 பரீட்சைக் கட்டணமாக அறவிடப்படும். பரீட்சைக் கட்டணங்களை ஒன்லைன் முறைமையில் வழங்கப்பட்டுள்ள பின்வரும் கட்டணம் செலுத்தும் முறைகள் மூலம் மட்டுமே செலுத்த வேண்டும்.

i. எந்தவொரு வங்கி கிரெடிட் கார்டு மூலமாகவும்
ii. இணைய பரிவர்த்தனை வசதியுடன் கூடிய எந்த வொரு வங்கி டெபிட் கார்டு மூலமாகவும்
iii. இலங்கை வங்கியின் ஒன்லைன் வங்கி முறை மூலம்
iv. இலங்கை வங்கியின் எந்தவொரு கிளை மூலமாகவும்

♦ குறிப்பு:

(அ) மேற்கண்ட முறைகளைப் பயன்படுத்தி பணம் செலுத்துவது குறித்த அறிவுறுத்தல்கள் பரீட்சை தொடர்பான தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

(ஆ) கட்டண பற்றுச்சீட்டு SMS அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்தின் முழுத் தொகையும் செலுத்தப்படவேண்டும், மேலும் பரீட்சைக் கட்டணத்தை விட அதிகமாகவோ அல்லது குறைவாகவோ பணம் செலுத்தப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப் படும். மேற்கண்ட கட்டண முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தும்போது ஏற்படும் எந்தவொரு பிழைகளுக்கும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப்பாகாது.

(இ) பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட கட்டணம் எந்தக் காரணத்திற்காகவும் திரும்பப் பெறப்படவோ அல்லது வேறு பரீட்சைக்கு மாற்றப்படவோ முடியாது.

04. ஒன்லைன் பரீட்சை விண்ணப்பம் ஆங்கிலத்தில் மட்டுமே நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பதாரர் ஒன்லைனில் சமர்ப்பித்த மென்பிரதியையும் பதிவுத் தபாலில் அனுப்பிய அச்சுப்பிரதியையும் பரீட்சைகள் திணைக்களம் பெற்றுக்கொண்டதும், மென்பிரதி மற்றும்

அச்சுப்பிரதி சரிபார்க்கப்பட்டு, திணைக்களத்தால் செல்லுபடியாகும் விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்வது/ ஏற்றுக்கொள்ளாதது குறித்த அறிவிப்பு முறைமையை அணுகப் பயன்படுத்தப்படும் கைத் தொலைபேசி இலக்கத்திற்கு SMS வழியாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பப்படும். ஒன்லைன் விண்ணப் பத்தை பூர்த்தி செய்வதற்கு முன், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான அறிவுறுத்தல்களைப் பதி விறக்கவும். விண்ணப்பத்தை நிரப்பும்போது இந்த அறிவுறுத்தல்களை கவனமாகப் பின்பற்றவும். அச்சுப் பிரதியைப் பெற்ற பின்னர் விண்ணப்பத்தில் செய்யப் படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியாகும் திருத்தமாக கருதப்படாது. முழுமையற்ற விண்ணப்பங்கள் முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும்.

விண்ணப்பத்தின் அச்சுப் பிரதி ‘பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், நிறுவன பரீட்சைகள் ஒழுங்கமைப்பு பிரிவு, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை” என்ற முகவரிக்கு திணைக்களத் தலைவரினால் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

05. பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தில் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலையப் பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு பின்வரும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக் கொள்ளப்படும்.

I. தேசிய அடையாள அட்டை
II. செல்லுபடியான வெளிநாட்டுக் கடவுச் சீட்டு
III. செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அத்துடன், பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு ஏற்ற வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் நுழைய வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தலை மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்த நேரம் முதல் பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகள் விண்ணப்பதாரரை இனங்காணுவதற்கு ஏற்ற வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காது இருத்தல் வேண்டும்.

06. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளார்கள் எனும் எடுகோளின் பேரில், விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக்கட்டணத்தை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத் தப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்ப தாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை ஒன்லைன் வழியாக வழங்கப்படும். அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டவுடன், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இணைய அறிவிப்பு/ குறுஞ்செய்தி மூலம் விண்ணப்பதாரர்களுக்கு அதை அறிவிக்கும். ஒரு விண்ணப்பதாரருக்கு தனது அனுமதி அட்டை கிடைக்கப்பெறவில்லை என்றால், விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் தாபனக் கிளையில் அது குறித்து விசாரிக்க வேண்டும். அத்தகைய விசாரணைகளை மேற்கொள்ளும்போது, விண்ணப்பதாரர் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இல. மற்றும் முகவரி ஆகியவற்றைச் சரியாகக் குறிப்பிட்டு ஒரு கோரிக்கைக் கடிதத்தை அனுப்புவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அத்தகைய விசாரணையின் போது பரீட்சைத் திணைக்களத்தால் கோரப்படும் எந்தவொரு தகவலையும் உறுதிப்படுத்த, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம்/பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டு, ஏற்புடையதாயின், அதன் புகைப்பட பிரதியையும், விண்ணப்பத்தின் அஞ்சல் பதிவு பற்றுச்சீட்டையும் வைத்திருப்பது நல்லது.

06.1 பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது காணப் பட்ட பரீட்சார்த்தியின் பதவி, சேவை நிலையம் என்பன பரீட்சை சம்பந்தமான சகல நடவடிக்கை களுக்கும் ஏற்புடையன என்பதுடன், விண்ணப்பம் அனுப்பப்பட்டதன் பின்னர் அதுதொடர்பில் இடம்பெறும் மாற்றங்கள் எதுவும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

06.2 பரீட்சைக்கான அனுமதி அட்டையில் விண் ணப்பதாரரின் கையொப்பம் உறுதிப்படுத்தப் பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் அனுமதி அட்டையில் தமது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகார மளிக்கப்பட்ட அலுவலொருவரைக்கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

06.3 பரீட்சைக்குத் தோற்றும் முதல் தினத்திலேயே தனது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்ட அனுமதி அட்டையை பரீட்சை நிலையப் பொறுப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

07. இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட அனுமதி அட்டையுடன் முதல்முறையாக பரீட்சைக்குத் தோற்றும் உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏற்றவகையில் திணைக்களத் தலைவரினால் கடமை லீவு வழங்கப்படுதல் வேண்டும். பிரயாணக் கட்டணம் செலுத்தப்பட மாட்டாது.

08.1 இப்பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கில மொழிமூலங்களில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலமாக, போட்டிப் பரீட்சை ஒன்றின் ஊடாக சேவையில் இணைந்தவராயின் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய மொழியையும், போட்டிப் பரீட்சையின்றி அரச சேவையில் இணைந்தவராயின் அரசசேவையில் இணைவதற்கு ஏற்புடைய பரீட்சைக்குத் தோற்றிய மொழியையும் தெரிவுசெய்தல் வேண்டும். பரீட்சைக்குரிய சகல பாடங்களிற்கும் ஒரே மொழிமூலத்தைப் பயன்படுத்துதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பித்த மொழிமூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

08.2 பரீட்சையில் சித்தியடையும் பொருட்டு ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் பெற வேண்டிய ஆகக்குறைந்த புள்ளி அளவு 40% ஆகும். பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளின் புள்ளிகள் அடங்கிய ஆவணமொன்று பணிப்பாளர் நாயகம், தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்திற்கு இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும். பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், பெறுபேறுகளை பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரிகளுக்கு தனிப்பட்டரீதியில் அறிவிக்க மாட்டார். பரீட்சைக்குரிய பாடங்களை ஒரே தடவையில் அல்லது சில தடவைகளில் பூர்த்திசெய்வதற்கு விண்ணப்பதாரிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

09. இப்பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடைபெறும்.

10. **பரீட்சைப் பாடத்திட்டம்:**

மேற்படி பதவிக்கு உரிய பரீட்சை கீழ் குறிப்பிட்ட பாடங்களை உள்ளடக்கும்.

| *வினாப்பத்திரம்* | *நேரம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்திப் புள்ளிகள்* |
|---|---|---|---|
| 1.அடிப்படைப் புள்ளிவிபர முறைகள் | 02 மணி. | 100 | 40% |
| 2.அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும் | 02 மணி. | 100 | 40% |
| 3.நிதி ஒழுங்குவிதிகள் | 02 மணி. | 100 | 40% |

| | *வினாப் பத்திரம்* | *பாடத்திட்டம்* |
|---|---|---|
| 1 | அடிப்படைப் புள்ளிவிபர முறைகள் | தரவு சேகரித்தல், சமர்ப்பித்தல், t பரம்பல், சாதாரண பரம்பல், t கருதுகோட் சோதனை கோட்பாடுகளும் $x^2$ சோதனையும், இழைவரையம் மற்றும் மீடிறன் வளையி, மத்திய சார்பும், பிரிகை அளவுகளும் (ஆகாரம், இடையம், இடை) மாறற்றிறன், காலணை, நியம விலகல், மாதிரியெடு நுட்ப தத்துவங்கள், மாதிரியெடு அளவீடு, மாதிரியெடுப்பு வழு, மாதிரியெடுப்பல்லா வழு. சுட்டெண்கள், எளிய இணைபு, ஏகபரிமாணப் பிற்செலவு, அடிப்படைப் புள்ளிவிபர அறிவு<br>**வினாப்பத்திரத்தின் கட்டமைப்பு :**<br>(அ) மொத்த கேள்விகளின் எண்ணிக்கை 06. கேள்வி 1 10 குறுகிய பதில் வகை கேள்விகளைக் கொண்டுள்ளது. மேலும் ஏனைய 05 கேள்விகள் 05 துணைப் பிரிவுகளைக் கொண்டவை.<br>(ஆ) முதல் கேள்விக்கு கட்டாயமாக பதிலளிக்க வேண்டும் என்பதோடு, ஏனைய 05 கேள்விகளில் ஏதேனும் 04 கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும். அதன்படி, பதிலளிக்க வேண்டிய மொத்த கேள்விகளின் எண்ணிக்கை 05 ஆகும். |
| 2 | அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும் | இதன் பொருட்டு தாபன விதிக் கோவையின் அத்தியாயங்கள்: II, III, IV, V, VIII, XII, XIII, XIV, XIX மற்றும் மேற்படி அத்தியாயங்களுக்கான திருத்தப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் பொதுச் சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் பின்பற்றப்பட வேண்டும்.<br>**வினாப்பத்திரத்தின் கட்டமைப்பு :**<br>(அ) மொத்த கேள்விகளின் எண்ணிக்கை 06. கேள்வி 1 10 குறுகிய பதில் வகை கேள்விகளைக் கொண்டுள்ளது. மேலும் ஏனைய 05 கேள்விகள் 05 துணைப் பிரிவுகளைக் கொண்டவை.<br>(ஆ) முதல் கேள்விக்கு கட்டாயமாக பதிலளிக்க வேண்டும் என்பதோடு, ஏனைய 05 கேள்விகளில் ஏதேனும் 04 கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும். அதன்படி, பதிலளிக்க வேண்டிய மொத்த கேள்விகளின் எண்ணிக்கை 05 ஆகும். |

| | *வினாப் பத்திரம்* | *பாடத்திட்டம்* |
|---|---|---|
| 3 | நிதி ஒழுங்குவிதிகள் | இது நிதி ஒழுங்குவிதிகளின் கீழ் குறிப்பிடப்பட்ட அதிகாரங்களை உள்ளடக்கும்.<br>➢ I ஆம் அதிகாரம் - வருமான செலவின மதிப்பீடு, திரட்டிய நிதியம், வருடாந்த மதிப்பீடு, வருடாந்த மதிப்பீட்டை மாற்றுதல் (நி.ஒ. 1 - 68 வரை)<br>➢ III ஆம் அதிகாரம் - நிதி முகாமையும் பொறுப்புடைமையும், பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர்கள், கணக்கீட்டு உத்தியோகத்தர்கள், வருமானக் கணக்கு உத்தியோகத்தர்களின் கொடுப்பனவுகளுக்கு அதிகாரம் வழங்குதல், அங்கீகாரமளித்தல், சான்றுப்படுத்தல், வேலைகளைக் குறித்தொதுக்குதல்(நி.ஒ. 124 - 147 வரை)<br><br>**வினாப்பத்திரத்தின் கட்டமைப்பு :**<br><br>(அ) மொத்த கேள்விகளின் எண்ணிக்கை 06. கேள்வி 1 10 குறுகிய பதில் வகை கேள்விகளைக் கொண்டுள்ளது. மேலும் ஏனைய 05 கேள்விகள் 05 துணைப் பிரிவுகளைக் கொண்டவை.<br>(ஆ) முதல் கேள்விக்கு கட்டாயமாக பதிலளிக்க வேண்டும் என்பதோடு, ஏனைய 05 கேள்விகளில் ஏதேனும் 04 கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும். அதன்படி, பதிலளிக்க வேண்டிய மொத்த கேள்விகளின் எண்ணிக்கை 05 ஆகும். |

குறிப்பு –

- ➢ மேற்படி பாடங்களுக்கு தனித்தனியாகவும் தோற்ற முடியும்.
- ➢ குறித்த காலத்தில் பரீட்சையில் சித்தியடையாமை அதன் பின்னரான வேதன ஆண்டேற்றத்தை பிற்போடுவதற்கு ஏதுவாகலாம்.

11. பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்குதலானது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் எனக் கருதப்படுதலாகாது.

12. இந்த வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்படாத எந்தவொரு விடயம் தொடர்பிலும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகத்தின் முடிவே இறுதியானதாக இருக்கும்.

13. இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கிலப் பதிப்புகளில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் சிங்களப் பதிப்பில் குறிப்பிட்ட விடயங்களே உத்தியோகபூர்வமானவையாகும்.

பணிப்பாளர் நாயகம்,
தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்.

"சங்கியான மந்திரய",
306/71, பொல்தூவ வீதி,
பத்தரமுல்லை.

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*